R.N.I.No.TNTAM/2000/3629 Postal Registration No.DDL/19/2018-2020
Date of Publication: 10th of Every Month
Posted on 10th of Every Month at Batlagundu Post office.
May 2018









கிறிஸ்துவின் சுவிசேஷத்தைச் செலவில்லாமல் ஸ்தாபிப்பதே எனக்குப் பலன்
1கொரிந்தியர் 9:18




## 28,29 மற்றும் 30 வது 'தி வேர்ட் ஆப் கிரைஸ்ட்' வாசகர் கூட்டம் தமிழக மாவட்டங்கள்

*Our Radio Program:* Sri Lanka Radio SW 31 Meter Every Saturday 5.30P.M & Our TV Program: Nambikkai TV Every Saturday 8.00 P.M & Tamilan TV Every Thursday 6.00 P.M

*Cell : 94435 58041*
*Phone : 04543 263 278*
*E-Mail arjunanglory@gmail.com*

*Office Address*
*The Word of Christ, D/5 Rajan Nagar*
*Batlagundu -624202, DINDIGUL DIST*
*TAMIL NADU INDIA*

**To**

Postman Remarks (If Undelivered):
- ☐ Refused
- ☐ No such person
- ☐ Address insufficient
- ☐ Left without instructions
- ☐ Deceased

*Our Postal Address:*
THE WORD OF CHRIST
POST OFFICE BOX No. 5
BATLAGUNDU - 624202
S.INDIA

Owned and published by B.Arjunan
from 17.2.102 D/5 Rajan Nagar, Batlagundu -624 202
and printed by R.Sathiyamoorthy at Bharathi press,
14/13/24 Melamanthai Street,Batlagundu - 624 202.
Editor and Publisher B.Arjunan



தனிப்பிரதி ரூ.5/-
ஆண்டு சந்தா ரூ.50/-

THE WORD OF CHRIST

# தி வேர்ட் ஆப் கிரைஸ்ட்


மரம் 18 | மே 2018 | கனி 6

கிறிஸ்துவின் வசனம் உங்களுக்குள்ளே
சகல ஞானத்தோடும் பரிபூரணமாக
வாசமாயிருப்பதாக – கொலோசெயர் 3:16

THE WORD OF CHRIST

ஆசிரியர்
B. அர்ஜுனன்

**Arjunan in Tamil:**
TV: Every Saturday 8:00 - 8:30 pm on Nambikkai TV.
Every Thursday 6:00 - 6:30 pm on Tamilan TV
Radio: Every Saturday 5:30 - 5:45 pm on 31 meter band on Sri Lanka radio.




**Hindi TV program:** Sunny, Francis, & Vinay David speaking. Sunday &Tuesday (7:00-7:30) pm on Shubhasandesh Hindi Channel

**P. K. Varghese in Malayalam:**
Every Saturday 6:00-6:30 am on Jai Hind channel TV.

**Philemon & Kingsley in Tamil:**
Tamilan TV: Sunday 6:45 - 7:00 am.
Nambikkai TV: Friday 6:00 - 6:30 am.

**Rajanayagam in Tamil:**
Tamilan TV: Monday 7:00-7:15 am
Thursday 9:30-10:00 pm.
Saturday 7:15-7:30 am.

**P. R. Swamy and Douglas in Tamil:**
Every Sunday to Wednesday at 5:30-5:45 pm on 31 meter band of Sri Lankan radio.

**Joshua & Ricky Gootam in Telugu:**
Every Sunday at 6.00 p.m.on Subhavartha channel
Every Wednesday at 6:30 p.m. on Rakshana channel
Every Thursday at 11:00 a.m. on Rakshana channel
Satyavani T.V. online: www.sakthitv.in
Every Wednesday & Friday at 8:00 pm.
Every day at 7:30 a.m. and 3:30 p.m. on Kanthi TV in A. P. only.

**THE WORD OF CHRIST**
Monthly Magazine
Editor
B.ARJUNAN

**தி வேர்ட் ஆப் கிரைஸ்ட்**
மாத இதழின் உள்ளே...
ஆசிரியருரை,
செய்திகள்: ஜெ.சி.சோட், பெட்டி சோட்,
ஜெர்ரிபேட்ஸ் மற்றும்
வேதபாடம், வாலிபர் பகுதி, பெண்கள் பகுதி
சிறுவர் பகுதி, வேத அறிவுப்போட்டி இன்னும் பல...

"Go ye into all the world, and preach the gospel to every creature" - Mark 16:15
"The Churches Of Christ Salute you" Romans 16:16

Published by
WORLD LITERATURE PUBLICATIONS
Post Box No.5, Batlagundu - 624 202.
SOUTH INDIA



## வேத அறிவுப் போட்டி எண்: 213

போட்டியாளர்கள் கவனத்திற்கு,

கீழ்கண்ட பத்து கேள்விகளுக்கும் வசன ஆதாரத்துடன் விடை எழுதி, தபால் மூலம் இம்மாதம் இறுதிக்குள் "தி வேர்ட் ஆப் கிரைஸ்ட்" முகவரிக்கு வந்து சேரும்படி உங்கள் முழு முகவரியுடன் எழுதி அனுப்பவும். விடை பின்வரும் மாத இதழில்களில் காண்க.

1. எது கர்த்தருக்குப் பயப்படும் பயம்?
2. அவனவன் தன்தன் சுய இச்சையினாலே இழுக்கப்பட்டு எப்படியாக சோதிக்கப்படுகிறான்?
3. ஜீவன்களுக்கெல்லாம் சுவாசம் ஒன்றே; எனவே மிருகத்தைப் பார்க்கிலும் மனுஷன் மேன்மையுள்ளவனா?
4. தமது மிகுந்த இரக்கத்தின்படியே நம்மை மறுபடியும் ஜெநிப்பித்தவர் யார்?
5. நானே தேவன் என்பதற்கு எவர்கள் எனக்குச் சாட்சிகள் என்று கர்த்தர் சொல்லுகிறார்?
6. மாம்சத்தில் வந்த இயேசுகிறிஸ்துவை அறிக்கைபண்ணாத எந்த ஆவியும் எவரால் உண்டானதல்ல?
7. சமாதானமில்லாதிருந்தும் சமாதானம் சமாதானம் என்று சொல்லி, என் ஜனத்தின் காயங்களை மேற்பூச்சாய்க் குணமாக்குகிறார்கள் என்று எந்த தீர்க்கதரிசியைக் கொண்டு கர்த்தர் பேசினார்?
8. நான் அவரைக் கண்டபோது செத்தவனைப்போல அவருடைய பாதத்தில் விழுந்தேன் என எழுதும் அப்போஸ்தலன் யார்?
9. உன் ஜனத்தின் புத்திரரோ, ஆண்டவருடைய வழி செம்மையானதல்ல என்கிறார்கள். எவர்களுடைய வழியே செம்மையானதல்ல என்கிறார்?
10. உங்கள் போதகர் வரிப்பணம் செலுத்துகிறதில்லையா என்று யாரிடம் கேட்டார்கள்?

**போட்டியாளர்கள் கவனிக்க...**

*ஒவ்வொரு முறையும் விடை எழுதும்போது உங்களுடைய பதிவு எண் (அதாவது Ref.No) மற்றும் மொபைல் எண் எழுதவும். நமது மாத இதழை படிக்க ஆர்வமுள்ளவர்களுக்கும் அறிமுகம் செய்யவும். நன்றி. ஆசிரியர்*

**இம்மாதம் 'தி வேர்ட் ஆப் கிரைஸ்ட்' நடத்தும் வேதபாட வகுப்புகளும் சுவிசேஷ கூட்டங்களும்**

31

நாள்: 08.05.2018 செவ்வாய் கிழமை
நேரம்: காலை 10.00 மணி
இடம்: D.சாலொமோன்
தேவ சபை
தென்றல் நகர், ஊட்டாத்தூர்ரோடு
பாடலூர் -621 109, பெரம்பலூர் மாவட்டம்
தொடர்புக்கு:
B.அர்ஜுனன், 9443558041






சிறுவர் பகுதி

# சகேயு – Zacchaeus

-K.Mohan

வேதவாசிப்பு: லூக்கா 19:1-10



பிரியமான பிள்ளைகளே, உங்கள் யாவருக்கும் இயேசுகிறிஸ்துவின் நாமத்தினால் என் வாழ்த்துக்கள். இன்று நாம் சகேயு என்பவரைப் பற்றிப் பார்ப்போம்.

இவர் ஆயக்காரருக்கு தலைவனும், ஐசுவரியவானுமாய் இருந்தார் என்று மேற்கண்ட வேதபகுதியில் வாசிக்கிறோம். இந்த சகேயு இயேசு எப்படிப்பட்டவரோ என்று அவரைப் பார்க்க வகைதேடினான். அவனோ குள்ளமான மனுஷனாக இருந்தபடியால் ஜனக்கூட்டத்தில் அவரைப் பார்க்கமுடியாமல், அவர் போகும் வழியில் முன்னாக ஓடி அவரைப் பார்க்கும்படி ஒரு காட்டத்தி மரத்தில் ஏறினான். அவனுக்குத்தான் எத்தனை அதிகமான வாஞ்சை பார்த்தீர்களா! இயேசு அந்த இடத்தில் வந்தபோது, அண்ணாந்துபார்த்து, அவனைக் கண்டு: சகேயுவே, நீ சீக்கிரமாய் இறங்கிவா, இன்றைக்கு நான் உன் வீட்டிலே தங்கவேண்டும் என்றார். அவனுக்கோ மிகுந்த மகிழ்ச்சி. நாமோ அவரைப்பார்க்க இந்த காட்டத்திமரத்தில் ஏறினோம் அவரோ என் வீட்டுக்கு வருகிறேன் என்று சொல்லுகிறாரே என்று நினைத்து சந்தோஷத்தோடே அவரை அழைத்துக்கொண்டு வீட்டுக்குப் போயிருப்பான்.

அவர் சகேயு வீட்டுக்குப்போவதை கண்ட சிலர் முறுமுறுத்தார்கள். இன்று இருக்கிறார்களே அவர்களைப்போல அன்றும், ஆண்டவர் இந்தப் பாவி வீட்டுக்கு தங்கும்படி போகிறார் என்று சொல்லி முறுமுறுத்தார்கள். சகேயுவுக்கோ ஒரே சந்தோஷம். அவன் ஆண்டவரை நோக்கி: ஆண்டவரே, என் ஆஸ்திகளில் பாதியை ஏழைகளுக்குக் கொடுக்கிறேன், நான் ஒருவனிடத்தில் எதையாகிலும் அநியாயமாய் வாங்கினதுண்டானால், நாலத்தனையாகத் திரும்பச் செலுத்துகிறேன் என்றான். அவனுடைய மனந்திரும்புதலைக் கண்ட கர்த்தர் இந்த வீட்டிற்கு இன்றைக்கு இரட்சிப்பு வந்தது இவனும் ஆபிரகாமுக்குக் குமாரனாயிருக்கிறானே என்றார்.

இன்று இந்த சகேயுவைப்போல ஆபிரகாமின் குமாரரும் குமாரத்திகளுமாக நாம் மாற வேண்டுமானால் இவனைப்போல மனந்திரும்பவேண்டும். அவன் ஒருவனிடத்தில் எதையாகிலும் அநியாயமாய் வாங்கினதுண்டானால், நாலத்தனையாகத் திரும்பச் செலுத்துகிறேன் என்றான். ஒரு ஆயக்காரன் இந்த அளவு மனமாற்றப் பட்டிருக்கிறான் என்றால் நாம் எந்த அளவுக்கு மாற்றப்படவேண்டும். மாறுங்கள் அப்பொழுது கர்த்தர் நம்முடைய வீட்டிற்கும் இரட்சிப்பைக் கட்டளையிடுவார்.



**மனப்பாட வசனம்**

" இழந்துபோனதைத் தேடவும் இரட்சிக்கவுமே மனுஷகுமாரன் வந்திருக்கிறார்"- லூக்கா19:10

**"கர்த்தருடைய நாமத்தைத் தொழுதுகொள்ளுகிற எவனும் இரட்சிக்கப்படுவான் - ரோமர் 10:13**




# தி வேர்ட் ஆப் கிரைஸ்ட்
## THE WORD OF CHRIST

புதிய ஏற்பாட்டு தூய கிறிஸ்தவ மாத இதழ்

மரம் - 18 மே -2018 கனி - 6


ஆசிரியருரை

## காணப்படுகிறவைகள் மற்றும் காணப்படாதவைகள்
## The Things Which are Seen & Which are Not Seen

**கா**ணப்படுகிறவைகள் எப்படிப்பட்டவைகள்? அவைகளின் முடிவு என்ன? காணப்படாதவைகள் எப்படிப்பட்டவைகள்? அவைகளுக்கு முடிவு உண்டா? போன்ற காரியங்களை தியானிப்போம். **முதலாவது காணப்படுகிறவைகளை தியானிப்போம்.** பரிசுத்த வேதாகமம் "காணப்படுகிறவைகள் அநித்தியமானவைகள், காணப்படாதவைகளோ நித்தியமானவைகள்" என போதிக்கிறது (2கொரி.4:18). இன்றைய மானிட வர்க்கம் காண்கிறவைகளையே நம்பிக்கொண்டிருக்கிறது. இவைகள் மனிதனுக்கு தேவையானவைகளே அதற்காக சதா உலகத்தையே தொற்றிக்கொண்டிருக்க வேண்டும் என்பதில்லை. "உலகத்திலும் உலகத்திலுள்ளவைகளிலும் அன்புகூராதிருங்கள்; ஒருவன் உலகத்தில் அன்புகூர்ந்தால் அவனிடத்தில் பிதாவின் அன்பில்லை" என காண்கிறோம் (1யோவா.2:15). உலகம் நாம் வாழ்வதற்காக உண்டாக்கப்பட்டது. அதையே நாம் பிடித்துக்கொண்டிருக்க அல்ல. இவைகளில் ஒருவன் அன்பு கூருவானேயாகில் அவனிடத்தில் பிதாவானவர் அன்பு செலுத்த மாட்டார். உலகம் என்று சொல்லும்போது பொருளாசையுள்ளவர்களாக அநேகர் உலகத்தையும் அதிலுள்ளவைகளையும் தன் ஜீவனுக்கும்மேலாக நேசிப்பார்கள். இப்படிச் செய்வதால் கண்களின் இச்சைக்கு பிசாசு உங்களை கொண்டுசெல்லுவான். நாளடைவில் அவைகள் மரணத்தைக் கொண்டுவரும். ஆகையால் உலகசிநேகம் தேவனுக்கு விரோதமான பகையாக இருக்கிறது. உலகத்தை வெறுத்து ஜீவனைப் பற்றிக்கொள்ளுங்கள்.

லோத்து என்ற மனிதனை அறிவீர்கள் அவன் "யோர்தான் நதிக்கு அருகான சமபூமி முழுவதும் நீர்வளம் பொருந்தினதாயிருக்கக்கண்டான். கர்த்தர் சோதோமையும் கொமொராவையும் அழிக்கும் முன்னே, சோவாருக்குப்போம் வழிமட்டும் அது கர்த்தருடைய தோட்டத்தைப்போலவும் எகிப்து தேசத்தைப்போலவும் இருந்தது" (ஆதி.13:10). ஆகையால் அந்த இடத்தை தேர்வு செய்தான். ஆனால் அவனுடைய தேர்வு பின்நாளில் தெரியவந்தது. அங்குள்ளவர்கள் பொல்லாதவர்களும் கர்த்தருக்கு முன்பாக மகா பாவிகளுமாயிருந்தார்கள். ஆகையால் அந்த பட்டணங்களை கர்த்தர் கந்தகத்தால் அழித்துப்போட்டார். லோத்து உலகப்பிரகாரமாக பார்த்து தேர்வு செய்தான். நம்முடைய வாழ்க்கையிலும் இவ்விதமாக பார்த்து ஏமாற்றப்படுகிறோம். ஆபிரகாமைப்போல அழைத்த தேவன் மீது நம்பிக்கை வைப்போமானால் ஆபிரகாமைபோல ஆசீர்வதிக்கப்படுவோம். புதிய ஏற்பாட்டில் தேமா என்று சொல்லக்கூடிய மனுஷனும் இவ்விதமாகவே உலகத்தைப் பார்த்து பின்னிட்டுபோய்விட்டான். தேவனுடைய உன்னதமான அழைப்பை அசட்டை

பண்ணினான். அதாவது "தேமா இப்பிரபஞ்சத்தின் மீது ஆசை வைத்து, என்னை விட்டுப் பிரிந்து, தெசலோனிக்கே பட்டணத்துக்குப்போய்விட்டான்" என பவுல் தீமோத்தேயுவுக்கு எழுதின புத்தகத்தில் குறிப்பிடுகிறார் (2தீமோ.4:10). ஊழியத்திற்கு ஒப்புக்கொடுத்தவர்கள் கூட சில உலககாரியங்களை மையமாக வைத்து அவைகளை நேசித்து இந்த தேமாவைப்போல பின்னிட்டுப்போய் விடுகிறார்கள். உலகமும் அதிலுள்ளவைகளும் ஒரு நாளில் அழிந்துபோய்விடும். இவைகள் எல்லாம் அழிவுக்கு வைக்கப்பட்டிருக்கிறது. இப்படி அழிந்துபோகிற பொருட்கள் மீது நம்முடைய கண்களைப் பறக்கவிடாமல். காணாதவைகளை நாம் நோக்கிப்பார்க்கவேண்டும்.

அப்போஸ்தலனாகிய பவுல் சொல்லுகிறார்; "எங்கள் புறம்பான மனுஷனானது அழிந்தும், உள்ளான மனுஷனானது நாளுக்குநாள் புதிதாக்கப்படுகிறது, மேலும் காணப்படுகிறவைகளையல்ல, காணப்படாதவைகளை நோக்கியிருக்கிற நமக்கு, அதிசீக்கிரத்தில் நீங்கும் இலேசான நம்முடைய உபத்திரவம் மிகவும் அதிகமான நித்திய கனமகிமையை உண்டாக்குகிறது" என்கிறார் (2கொரி.4:16,17). இவ்வுலகத்திலே புறம்பான மனுஷனுக்காக வாழ்வோமானால் எல்லாரைப்பார்க்கிலும் நாம் பரிதபிக்கப்படதக்கவர் களாயிருப்போம். ஏனென்றால் புறம்பான மனுஷன் அழியவேண்டும். அது அழிவுக்குரியது. பொதுவாக எல்லோருமே புறம்பான மனுஷனுக்கு முக்கியத்துவம் கொடுக்கிறார்கள். பிரான்ஸ் நாட்டில் தற்போது ஒரு கணக்கெடுப்பில் பெண்கள் தங்களை அலங்கரிப்பதற்காக ஆயுள் முழுக்க 65லட்சம் ரூபாய் ஒவ்வொரு பெண்ணும் செலவிடுவதாக கணக்கெடுத்திருக்கிறார்கள். இது அதிகப்படியானது அல்லவா? தேவன் இயற்கையாகவே பெண்களுக்கு வேண்டிய அழகை கொடுத்திருக்கிறார். இதற்கு மேலும் அவர்கள் இவ்வளவு செலவு செய்து புறம்பான அலங்கரிப்பு செய்கிறார்கள். இவைகள் நாளுக்கு நாள் அழிந்து உள்ளான மனுஷனானது நாளுக்கு நாள் புதிதாக்கப்படவேண்டும். அதற்காக சுத்தமாக இருக்கக்கூடாது என்பதல்ல. அதிகமாக அவைகளுக்கு செலவு செய்யாமல் உள்ளான மனுஷனில் நாம் பலப்படவேண்டும்.

கிராமப்புறங்களில் ஊழியம்செய்து நான் கரிகருத்துப்போய்விட்டேன். என்னைப் பார்க்கிறவர்கள் எல்லாரும் என்ன இப்படி ஆகிவிட்டாய் என்று கேட்கிறார்கள். ஆகையால் நான் இனி கிராமப்புறங்களில் ஊழியம் செய்யாமல் என்னுடைய சரீரம் கருத்துப்போகாமல் பாதுகாப்பேன் என்று ஒருவர் தீர்மானம் பண்ணினால் அந்த ஊழியங்களை யார்பார்ப்பது. நமக்கு கர்த்தருடைய ஊழியம் பெரியதா? நம்முடைய சரீரம் வெயில்பட்டு கருத்துப்போவது முக்கியமா? இந்த சரீரத்தில் எத்தனை நாட்கள் இருக்கப்போகிறோம். மண்ணுக்குப்போகும் இந்த சரீரத்தில் இருக்கக்கூடிய நாட்களில் நாம் அழிந்துபோகும் மக்களை நாடிச்செல்லவேண்டும். காணப்படுகிறவை களையல்ல காணப்படாதவைகளை நோக்கியிருக்கிறோம். இந்த கொஞ்சகால கஷ்டங்கள் நமக்கு நித்திய கனமகிமையைக் கொண்டுவரும். மேலான ஆசீர்வாதங்களை பெற நாம் ஒவ்வொரு நாளும் புறம்பான மனுஷனையும் அதனுடைய ஆசைகளையும், புறம்பாக்கிப்போட்டுவிட்டு உள்ளான மனுஷனில் வல்லமையாய் பலப்படவேண்டும். காணப்படுகிறவைகள் அநித்தியமானவைகள் என அறிந்த நாம் அவைகளுக்கு முக்கியத்துவம் கொடுக்காமல், நித்திய நித்தியமாக என்றும் நிலைத்திருக்கிற பரலோகத்தை நோக்கி வெற்றி நடைபோடுவோம். உலகத்திலும் உலகத்திலுள்ளவைகளிலும் அன்பு கூராமல், நம்மை காக்கும்படியாக சிலுவையில்



**பொது அறிவு சோதனை**

1. ஒரு விமானம் 900 மைல் வேகத்தை எட்டும்போது ஒலியிருக்காது, ஏனெனில்
அ) அது கீழே விழுந்துவிடும் ஆ) அந்த அளவு வேகத்தில் விமானம் சப்தமிடாது இ) விமானத்தின் வேகம் ஒலியின் வேகத்தைவிட அதிகம்
2. வௌவால் இருட்டில் எவ்வாறு வேகமாக பறக்கிறது?
அ) அதன் எதிரொலியால் அறிந்து செயல்படுகிறது ஆ) அவைகளால் இருளில் பொருள்களை பார்க்க முடியும் இ) அவை குறைந்த வேகத்திலே பறக்கின்றன
3. சந்திரன் காற்று மண்டலத்தைப் பெற்றிருக்கவில்லை, ஏனெனில்
அ) அதன் தடிப்பு தன்மை குறைவானது ஆ) சந்திரனிலுள்ள பாறைகள் எந்தவிதமான வாயுவையும் வெளிவிடுவதில்லை இ) சூரியனிடமிருந்து அதன் அருகாமை
4. மலை உச்சியில் உருளைக் கிழங்குகள் வேக அதிக நேரம் எடுத்துக்கொள்கின்றன, ஏனெனில் அ) அங்கு காற்றின் அழுத்தம் மிகக் குறைவாக உள்ளது ஆ) அங்கு காற்றின் அழுத்தம் மிக அதிகமாக உள்ளது இ) அங்கு குளிர் அதிகமாக உள்ளது
5. சமவெப்ப நிலையில் நீரைக் காட்டிலும் நீராவியால் உடம்பில் ஏற்படும் புண்மோசமானது, ஏனெனில் அ) அது ஒரு வாயு ஆ) அந்த வெப்ப நிலையில் அது அதிக கலோரி வெப்பத்தை கொண்டிருக்கும் இ) அது குறைந்த அளவு நீரினைக் கொண்டிருக்கும்

விடைகள்: 1. இ 2. அ 3. அ 4. அ 5. ஆ




**வேத அறிவுப்போட்டி எண் 210 ல் வெற்றிபெற்றவர்கள்**

38.Mrs.கெத்சிசெல்வின் - சென்னை
39.E.ஜாய்ஸ்ஹெலன்புனிதா - சென்னை
40.R.ஜெபக்கனி - கூமாபட்டி
41.N.கமலவேணி - சென்னை
42.N.A.அருள்செல்வராஜ்- அகஷ்தியார்பட்டி
43.R.அனிதாநெகேமியா - ரெட்டியார்பட்டி
44.N.ஜெபத்தாய் - நாசரேத்
45.Mrs.அல்லிராணிகாட்வின் - சென்னை
46.Mrs.ஃபிரமிளாரேவதி - கோவை
47.Mrs.சுசிலா ராஜசிங் - வள்ளியூர்
48.J.ஜான்சி - ஆனைமலை
49.S.சாந்தகுமாரி - நாசரேத்
50.Mrs.ஜெயாமேரிதாய் - திண்டுக்கல்
51.Mrs.இந்திராஜெபக்கனி - நாசரேத்
52.M.ராமசந்திரன் - ஒட்டநத்தம்
53.Sis.கஸ்தூரி - ஒட்டநத்தம்
54.J.ராணி - ஆனந்தபுரம்
55.Mrs.சரோஜினி - பாளையங்கோட்டை
56.G.பூங்கோதை - கோபி
57.Mrs.தேவிராஜசிங் - திருப்பூர்
58.K.S.மாணிக்கவாசகம் - திருச்சி
59.Mrs.நவரத்தினஞானராஜ் - நாசரேத்
60.Mrs.ஜெபாநியூட்டன் - திருநெல்வேலி
61.Mrs.ருக்மணிஜெயசீலன் - தேனி

**வேத அறிவுப்போட்டி எண் 211 ல் வெற்றிபெற்றவர்கள்**

38.P.சந்திராடேனியேல் - நஞ்சான்குளம்
39.Mrs.கெத்சிசெல்வின் - சென்னை
40.S.சாந்தகுமாரி - நாசரேத்
41.Mrs.கிரேஸ் ஸ்டெல்லாபக்தர்- சென்னை
42.Mrs.ரூபவல்யா - நாசரேத்
43.Mrs.சாந்தாபழனி - தருமபுரி
44.S.ஜாய்சந்திரகாந்தா - நெல்லூர்
45.Miss.சாந்தாதேவி - தேனி
46.Mrs.ஞானம்பிலிப் - கோவை
47.B.ஸ்டெல்லாம்மா - கூத்தூர்
48.Mrs.கமலாதேவபிச்சை- கலுங்குவிளை
49.Mrs.ஃபுளோராசுந்தர் - மதுரை
50.Mrs.மேரிநிர்மளா - மதுரை
51.E.ஜாய் ஹெலன் புனிதா - சென்னை
52.Mrs.அல்லிராணிகாட்வின் - சென்னை
53.J.விக்டர்சுவிசேஷமுத்து - ஆனந்தபுரம்
54.Mrs.ஜெபாநியூட்டன் - திருநெல்வேலி
55.S.R.பெரியசாமி - சேலூர்
56.S.A.சாமுவேல் - பரமத்தி
57.Mrs.ருக்மணிஜெயசீலன் - தேனி
58.Mrs.இளவரசிஜோபிதா - கோவை
59.N.கமலவேணி - சென்னை
60.A.ஆலிஸ்குணசீலி - தூத்துக்குடி
61.Mrs.தேவபுஷ்பம் - நாசரேத்
62.S.ரெஜினாசெல்வராஜ் - நாசரேத்
63.Mrs.கிரேஸ்சங்கீதா - தூத்துக்குடி
64.N.A.அருள்செல்வராஜ்- அகஸ்தியார்பட்டி
65.N.இந்திராஜெபக்கனி - நாசரேத்
66.Mrs.சுசிலாராஜசிங்- சின்னம்மாள்புரம்
67.N.ஜெபத்தாய் - தூத்துக்குடி
68.R.ஸ்டெல்லாஇளமதி - தாராபுரம்

## வேத அறிவுப்போட்டி எண் 210 ன் விடைகள்

1. பாலாக்,பிலேயாம் - எண்.24:10
2. சந்தோஷமாக - யோவா.16:20
3. ஆம் - உபா.17:15
4. ஆம் - அப்.12:12
5. சுதந்தரம் - யோசு.18:7
6. இல்லை - ரோம.10:2
7. தெலீலாள் - நியா.16:16
8. ஆம் - 1கொ.10:14
9. சவுல் - 1சாமு.14:45
10. மக்கெதோனியா சபையார் - 2தெச.8:5

## வேத அறிவுப்போட்டி எண் 211 ன் விடைகள்

1. மேவிபோசேத் - 2சாமு.9:13
2. இல்லை - கலா.1:7
3. சிம்ரி - 1இரா.16:15
4. தகாதவைகள் - எபே.5:4
5. நான்கு - 2இரா.7:3
6. எப்பாபிரோதீத்து - பிலி.2:24
7. தாவீது - 1நாளா.29:15
8. கொலோசேய சபைக்கு - கொலோ.1:29
9. 666 - 2நாளா.9:14
10. தெசலோனிக்கேய சபை - 1தெச.3:4

## வேத அறிவுப்போட்டி எண் 210 ல் வெற்றிபெற்றவர்கள்

1. Tmt.மரகதம் திரவியம் - கோம்பை
2. Mrs.ராஜம்மாள் - திருப்பூர்
3. K.ராணி - தூத்துக்குடி
4. A.டேவிட்ஜெயச்சந்திரன் - மதுரை
5. Mrs.ஜோதிமணி - பெருமாள்பட்டி
6. Mrs.ரத்னாபாய்பிரசாத் - மதுரை
7. Miss.சாந்தாதேவி - தேனி
8. T.ராஜாத்தி - கோம்பை
9. J.செல்வராஜ் - தூத்துக்குடி
10. S.சீமோன் - கே.சி.புதூர்
11. P.சந்திராடேனியேல் - நஞ்சான்குளம்
12. S.ஜாய்சந்திரகாந்தா - நல்லூர்
13. J.ஆலிவ் - கோவை
14. Mrs.ஜெயமணிராஜம்மாள் - கடலூர்
15. Mrs.பாலின்மார்ட்டின் - காரைக்குடி
16. Mrs.ஜெபசீலிஜெயக்கொடி - திருச்சி
17. Mrs.ஃபிராங்கலினாஜான் - ஊட்டி
18. T.ஏஞ்சலின்நேசமலர் - சாந்தாபுரம்
19. Mrs.ஜாய்மேத்யு - வி.கே.புரம்
20. S.ரெஜினாசெல்வராஜ் - நாசரேத்
21. Mrs.தேவபுஷ்பம் - நாசரேத்
22. Mrs.ஜெசிமேபிள் - கோவை
23. Mrs.வசந்தாரபீந்திரன் - தூத்துக்குடி
24. Mrs.அன்னம்மாள் - தூத்துக்குடி
25. Mrs.கிறிஸ்டோபல் - கோவை
26. Mrs.ரூபவல்யா - நாசரேத்
27. Mrs.அந்தோணியம்மாள்- கலுங்குவிளை
28. Mrs.ஞானம்பிலிப் - கோவை
29. Mrs.கிரேஸ் ஸ்டெல்லாபக்தர்- சென்னை
30. S.R.பெரியசாமி - சேலூர்
31. S.தங்கம் - கன்னியாகுமரி
32. Mrs.மேரிநிர்மலா - மதுரை
33. Mrs.ஃபுளோராசுந்தர் - மதுரை
34. B.ஞானதீபம்ஜெபராஜ்- இடையான்குடி
35. S.லதா - தேனி
36. Mrs.ரூத்ஜெயராணி - பெருமாள்புரம்
37. Mrs.தேவதாதேவபிரியம் - சென்னை

## வேத அறிவுப்போட்டி எண் 211 ல் வெற்றிபெற்றவர்கள்

1. K.ராணி - தூத்துக்குடி
2. M.ராமசந்திரன் - ஒட்டநத்தம்
3. Sis.கஸ்தூரி - ஒட்டநத்தம்
4. A.டேவிட்ஜெயசந்திரன் - மதுரை
5. D.அன்புக்கமலம் - காரைக்குடி
6. B.ஞானதீபம் ஜெபராஜ்- இடையான்குடி
7. R.அந்தோணியம்மாள்- கலுங்குவிளை
8. Tmt.மரகதம் திரவியம் - கோம்பை
9. D.டயானாஏஞ்சல் - கூடன்குளம்
10. Mrs.வசந்தாரபீந்திரன் - தூத்துக்குடி
11. Mrs.ஜெபசீலிஜெயக்கொடி - திருச்சி
12. Mrs.ஜாய்மேத்யு - வி.கே.புரம்
13. Mrs.ரத்னாபாய்பிரசாத் - மதுரை
14. Mrs.பியூலாஜேசுராஜன் - புதுச்சேரி
15. Mrs.ஆலிவ்ஜெயபாலன் - கோவை
16. J.ஜான்சி - ஆனைமலை
17. J.செல்வராஜ் - தூத்துக்குடி
18. R.ஜான்பீட்டர் - திண்டுக்கல்
19. Mrs.அன்னம்மாள் - தூத்துக்குடி
20. Mrs.தேவதாதேவபிரியம் - தூத்துக்குடி
21. T.ஏஞ்சலின் நேசமலர் - சாந்தபுரம்
22. S.தங்கம் - கன்னியாகுமரி
23. W.எபிநேசர் - கடலூர்
24. J.ராணி ஜான்சன் - ஆனந்தபுரம்
25. Mrs.நவரத்தினஞானராஜ் - நாசரேத்
26. G.பூங்கோதை - கோபி
27. Mrs.ஃபுளோராஎழில் - ஆம்பூர்
28. K.S.மாணிக்கவாசகம் - திருச்சி
29. Mrs.ஜெயமணிஜெயபாண்டியன் - கடலூர்
30. Mrs.ஃபிராங்கலினாஜான் - ஊட்டி
31. Mrs.பிரமிளாரேவதி - கோவை
32. R.ஜெபக்கனிமார்க்ஸ் - கூமாபட்டி
33. E.அதிசயம் - பனைகுடி
34. Mrs.ஜோதிமணி - பெருமாள்பட்டி
35. Mrs.கிறிஸ்டோபல் - கோவை
36. M.N.ரமேஷ் - திருவள்ளூர்
37. Mrs.பாலின்மார்ட்டின் - காரைகுடி



தன்னையே தியாக பலியாக ஒப்புக்கொடுத்த இயேசுவிலும் அவருடைய வசனத்திலும் அன்பு செலுத்துவோம்.

**காணப்படாதவைகள் நித்தியமானவைகள் என காண்கிறோம்**. எது நமக்கு காணப்படாதவைகளாக இருக்கிறது? பரலோகமே காணப்படாத ஒன்றாக இருக்கிறது. அது நித்தியமான ஒன்றாகவே இருக்கிறது. "விசுவாசமானது நம்பப்படுகிறவைகளின் உறுதியும் காணப்படாதவைகளின் நிச்சயமுமாயிருக்கிறது" என எபிரெய ஆசான் குறிப்பிடுகிறார் (எபி.11:1). அது நம்பப்படுகிறவைகளின் உறுதியாக இருக்கிறது. அநேகருடைய கேள்வி அதை யார் பார்த்தது? மனிதன் தான் காண்கிறதை நம்பவேண்டுவதென்ன? காணாததை நம்புகிறதே நம்பிக்கை. இந்த நம்பிக்கை இருக்கிறவர்கள் அதில் பிரவேசிப்பார்கள். ஆபிரகாமை தேவன் அழைக்கும்போது அவனுக்கு ஒரு அடி நிலம்கூட இல்லை என்று காண்கிறோம். "சகோதரரே, பிதாக்களே, கேளுங்கள். நம்முடைய பிதாவாகிய ஆபிரகாம் காரானூரிலே குடியிருக்கிறதற்கு முன்னமே மெசொப்பொத்தாமியா நாட்டிலே இருக்கும்போது மகிமையின் தேவன் அவனுக்குத் தரிசனமாகி: நீ உன் தேசத்தையும் உன் இனத்தையும் விட்டுப் புறப்பட்டு, நான் உனக்குக் காண்பிக்கும் தேசத்துக்கு வா என்றார். அப்பொழுது அவன் கல்தேயர் தேசத்தைவிட்டுப் புறப்பட்டு, காரானூரிலே வாசம்பண்ணினான். அவனுடைய தகப்பன் மரித்தபின்பு, அவ்விடத்தை விட்டு நீங்கள் இப்பொழுது குடியிருக்கிற இத்தேசத்திற்கு அவனை அழைத்துக்கொண்டுவந்து குடியிருக்கும்படி செய்தார். இதிலே ஒரு அடி நிலத்தையாகிலும் அவனுடைய கையாட்சிக்குக் கொடாமலிருக்கையில், அவனுக்குப் பிள்ளையில்லாதிருக்கும்போது; உனக்கும் உனக்குப் பின்வரும் உன் சந்ததிக்கும் இதைச் சுதந்தரமாகத் தருவேன் என்று அவனுக்கு வாக்குத்தத்தம் பண்ணினார்" (அப்.7:2-5). தேவன் ஆபிரகாமுக்கு வாக்குத்தத்தம் பண்ணினதை விசுவாசத்தோடே அவன் பெற்றுக்கொண்டான். அவன் விசுவாசமில்லாமல் லோத்தைப்போல கண்களை ஏறிட்டுப்பார்த்து ஒரு இடத்தை தேர்ந்தெடுத்திருப்பானேயானால் லோத்தைப்போல இவனும் போயிருப்பான் அல்லவா?

அன்பானவர்களே, வாக்குத்தத்தம் செய்த கர்த்தர் வல்லவராயிருக்கிறார். அவர் நமக்கு உண்டாக்கிவைத்திருக்கிற இந்த உலகமே இவ்வளவு அழகாக இருக்குமானால் இவைகளைப்பார்க்கிலும் நித்திய நித்தியமாக நிலைத்திருக்கிற அந்த பரலோகம் எப்படியிருக்கும் என்பதை எண்ணிப்பாருங்கள். இந்த உலகத்திலே இன்னும் எத்தனையோ காரியங்களை நாம் பார்க்காதவர்களாகவே இருக்கிறோம். ஏன் கொடைக்கானல் மலையை பார்க்காதவர்கள் எத்தனையோ பேர் இருக்கலாம். அதைப்போல காஷ்மீர் பகுதியைப் பார்க்காதவர்கள் எத்தனையோபேர் இருக்கலாம். நாம் எல்லோருமே பார்க்காத அண்டார்டிக்கா பகுதிகள் இருக்கிறது. மிகவும் பணிபடர்ந்த இந்த பகுதிகளை ஆராய்ச்சியாளர்கள் மட்டுமே பார்த்திருக்கிறார்கள். இப்படி எண்ணிலடங்கா பகுதிகளை இந்த உலகத்திலே நாம் கேள்விப்படுகிறோம், அல்லது தொலைக்காட்சிகளில் பார்க்கிறோம். ஆனால் நேரடியாக சென்று பார்த்ததில்லை. ஆனாலும் அப்படியொரு பகுதியிருப்பதாக நாம் நம்புகிறோம். இதைப்போல நித்தியமான பரலோகத்தை தேவன் மனிதனுக்காக ஏற்படுத்திவைத்திருக்கிறார் என்ற நம்பிக்கை உங்களுக்கு ஏற்படவேண்டும். அதில் பிரவேசிப்பதற்காக சில வழிகளைக்குறித்து வேதாகமம் நமக்கு எடுத்துக்காட்டுகிறது. அந்த வழிகளை பின்பற்றுவோமானால் காணப்படாத அந்த பரலோகத்தில் பிரவேசிப்போம். ஆகையால் "நாம் அவபக்தியையும் லௌகீக இச்சைகளையும் வெறுத்து, தெளிந்தபுத்தியும் நீதியும் தேவபக்தியும்

உள்ளவர்களாய் இவ்வுலகத்திலே ஜீவனம்பண்ணி, நாம் நம்பியிருக்கிற ஆனந்த பாக்கியத்துக்கும், மகா தேவனும் நமது இரட்சகருமாகிய இயேசுகிறிஸ்துவினுடைய மகிமையின் பிரசன்னமாகு தலுக்கும் எதிர்பார்த்துக்கொண்டிருக்கும்படி நமக்குப் போதிக்கிறது" (தீத்.2:13,14).

ஆண்டவராகிய இயேசு நாம் காணாத பரலோகத்திலிருந்து வருவார். அவரோடு ஆயத்தமுள்ளவர்கள் அதாவது காண்கிறவைகளை வெறுத்து, காணாதபரலோகத்தை நோக்கியிருக்கிறவர்கள், அவரோடு கூட ஆகாயத்தில் எடுத்துக்கொள்ளப்படுவார்கள். என்னாலேயல்லாமல் ஒருவனும் பிதாவினிடத்தில் வரான் என்று இயேசுவானவர் சொல்லியிருக்கிறார். அவரே தேவனால் ஏற்படுத்தப்பட்ட நியாயாதிபதி. அவர் பூமியை நீதியோடும் தம்முடைய சத்தியத்தோடும் நியாயந்தீர்ப்பார். ஆகையால் இவ்வுலகத்தின் இச்சையை வெறுத்து கர்த்தருடைய வசனத்திற்கு முக்கியத்துவம்கொடுத்து அவைகளை பற்றிக்கொள்ளுங்கள். நீங்கள் இவ்வுலகத்திலே தெளிந்த புத்தியுள்ளவர்களாக ஜீவனம்பண்ணவேண்டும். இன்றைக்கு அநேகர் கர்த்தரை அறிந்திருக்கிறார்கள். ஆனால் அறியவேண்டிய பிரகாரம் அறியாமல் இருக்கிறார்கள். தோமா என்று சொல்லக்கூடிய ஒரு சீஷனை நாம் எல்லோரும் அறிவோம். அவன் மற்றசீஷர்கள் சொல்லுவதை ஏற்றுக்கொள்ளாமல் அவரை நான் பார்த்து அந்தக் காயத்திலே என் விரலைவிட்டு, என் கையை அவருடைய விலாவிலே போட்டாலொழிய விசுவாசிக்கமாட்டேன் என்றான். இப்படி அநேகர் பார்த்து விசுவாசிக்கவே முயற்சிக்கின்றனர். ஆகையால் அப்படிப்பட்டவர்களை பிரியப்படுத்தும்படியாக அநேக போதகர்கள் அவர்களுக்கு ஏற்றாற்போல காரியங்களை செய்கிறார்கள். ஆனால் கர்த்தர் தோமாவைப்பார்த்து சொன்னது என்ன? "தோமாவே, நீ என்னைக் கண்டதினாலே விசுவாசிக்கிறாய், காணாதிருந்தும் என்னை விசுவாசிக்கிறவர்கள் பாக்கியவான்கள் என்றார்" (யோவா.20:29). அன்பு சகோதரனே, சகோதரியே நீ எப்படி விசுவாசித்துக்கொண்டிருக் கிறாய்? கர்த்தராகிய இயேசு உனக்காக மரித்து அடக்கம்பண்ணப்பட்டு, பின்பு மூன்றாம் நாள் உயிர்த்தார். அவர் உனக்காக ஒரு ஸ்தலத்தை ஆயத்தம் பண்ணிவைத்திருக்கிறார். அதில் பிரவேசிக்க அதை விசுவாசி.

**நிலையான ஒன்று பூமியில் உண்டா?**

இல்லவே இல்லை, ஆனால், நிலையான ஒன்றைக்குறித்து வேதாகமம் போதிக்கிறது. அதுவே பரலோகம். "நிலையான நகரம் நமக்கு இங்கே இல்லை, வரப்போகிறதையே நாடித்தேடுகிறோம். ஆகையால் அவருடைய நாமத்தை துதிக்கும் உதடுகளின் கனியாகிய ஸ்தோத்திரபலியை அவர்மூலமாய் எப்போதும் தேவனுக்குச் செலுத்தக்கடவோம்" என்கிறார் எபிரெய ஆசான் (எபி.13:14,15). இப்பூமிதான் நிலையான வாழ்வு என்று அநேகர் எண்ணிக்கொண்டு தங்களுடைய வாழ்க்கையை வீணாக்கிக்கொண்டிருக்கின்றனர். தங்களுக்கும் தங்களுக்குப்பின் வரும் சந்ததிகளுக்கும் தேவையானவற்றை சவதரித்துக்கொண்டிருக்கின்றனர். பூமியிலே உங்களுக்கு பொக்கிஷங்களை சேர்த்து வைக்கவேண்டாம். இங்கே பூச்சியும் துருவும் அவைகளை கெடுக்கும். இங்கே திருடரும் கன்னமிட்டு திருடுவார்கள். பரலோகத்திலே உங்களுக்கு பொக்கிஷங்களை சேர்த்துவையுங்கள் அங்கே பூச்சியாவது துருவாவது கெடுக்கிறதும் இல்லை; அங்கே திருடர் கன்னமிட்டுத் திருடுகிறதுமில்லை என்று கர்த்தர் சொல்லுகிறார். காணாததை நோக்கிப்பார்த்து, அதை சுதந்தரித்துக்கொள்ள உங்களை ஒப்புக்கொடுங்கள். உங்களுக்காக ஜெபிக்கிறோம்.



## தசமபாக காணிக்கை நியாயப்பிரமாண காலபோதனையேயன்றி கிருபையின் கால சத்தியமல்ல

-S.Chandra Janaki

புதிய ஏற்பாட்டில் 'தசமபாக காணிக்கை' இது எந்த ஒரு இடத்திலாவது யார் மூலமாகவாவது போதிக்கப்படவில்லை என்பது மறுக்க முடியாத ஏற்றுக்கொள்ளவேண்டிய உண்மை.

மத்.5-7 அதிகாரங்கள் மற்றும் லூக்.6:20-49; 12:21-59 வசனங்களில் இயேசுவால் போதிக்கப்பட்ட கிருபையின் கால சத்தியங்கள் உள்ளடங்கியவை. காணிக்கையைப் பற்றி மத்.5:23,24 "முன்பு போய் உன் சகோதரனோடே ஒப்புரவாகி பின்பு வந்து உன் காணிக்கையை செலுத்து. லூக்.6:38 கொடுங்கள் அப்பொழுது உங்களுக்கும் கொடுக்கப்படும். நீங்கள் எந்த அளவினாலே அளக்கிறீர்களோ அந்த அளவினால் உங்களுக்கும் அளக்கப்படும். இதுவே காணிக்கையைப் பற்றிய கிருபையின் கால போதனையாக இருக்கிறது.

லூக்.21:3 ல் இரண்டு காசு போட்ட ஒரு ஏழையை இயேசுவானவர் பாராட்டிய இந்நிகழ்விலும் காணிக்கையின் அளவல்ல, காணிக்கை செலுத்துவோரின் எண்ணமே முக்கியமாக பார்க்கப்படுகிறது என்பதை அறிந்துகொள்ளுங்கள். இயேசுவானவர் ஒவ்வொருமுறையும் போதிக்கும்போது பூர்வத்தாருக்கு (நியாயப்பிரமாணகாலத்தில் இருந்தவர்களுக்கு) உரைக்கப்பட்டதை கேள்விப்பட்டிருக்கிறீர்கள் நான் உங்களுக்குச் சொல்லுகிறேன் என்று புதிய கட்டளையாக சொல்லுகிறார்.

மற்றும் புதிய ஏற்பாட்டு கிருபையின் கால போதனையாக 2கொரி.8:1-15; 9:5-15 காணிக்கை கொடுக்கவேண்டியதின் அவசியத்தை எவ்வளவு Polite ஆக கேட்பவர் மனம் புண்படாதவகையில் வேதவசனத்தை நினைவூட்டி எப்படியெல்லாம் அன்பாகப் போதித்திருக்கிறார் என்பதை நியாயப்பிரமாணத்தை எடுத்துக்கொண்டு போதித்துக்கொண்டிருக்கிற போதகமார்கள் கவனிக்கவேண்டும். இப்படி கிருபையின் கால போதனைகளை விட்டுவிட்டு தொடாதே, ருசி பாராதே கொலோ.2:21 இதைச் செய்யாதே, அதைச்செய்யாதே எனப்போதிப்பதல்ல புதிய ஏற்பாடு.

மேலும் ரோம.3:20 பாவத்தை அறிகிற அறிவு நியாயப்பிரமாணத்தினால் வருகிறபடியால் எந்த மனுஷனும் நியாயப்பிரமாணத்தின் கிரியைகளினாலே தேவனுக்கு முன்பாக நீதிமானாக்கப்படுவதில்லை. பரிசேயன் ஒரு எடுத்துக்காட்டு லூக்.18:10. இப்பொழுதோ நாம் பழைமையான எழுத்தின்படியல்ல புதுமையான ஆவியின்படி ஊழியம் செய்யத்தக்கதாக நம்மைக் கட்டியிருந்த நியாயப்பிரமாணத்திற்கு மரித்தவர்களாகி அதினின்று விடுதலையாக்கப் பட்டிருக்கிறோம் ரோம.7:36.

கலா.3:10 நியாயப்பிரமாணத்தில் எழுதப்பட்டவைகளையெல்லாம் செய்யத்தக்கதாக அவைகளில் நிலைத்திராதவன் எவனோ அவன் சபிக்கப்பட்டவன். கிறிஸ்து நமக்காக சாபமாகி நியாயப்பிரமாணத்தின் சாபத்திற்கு நம்மை நீங்கலாக்கி மீட்டுக்கொண்டார். கலா.2:15 நியாயப்பிரமாணத்தின் கிரியைகளினாலல்ல கிறிஸ்துவைப்பற்றும் விசுவாசத்தினாலே நீதிமான்களாக்கப்படும்படிக்கு கிறிஸ்து இயேசுவின் மேல் விசுவாசிகளானோம். கலா.2:21 நீதியானது நியாயப்பிரமாணத்தினாலே வருமானால் கிறிஸ்து மரித்தது வீணாயிருக்குமே.

சிலுவையினருகே மகதலேனா மரியாளும் நின்று கொண்டிருந்தார்கள் (யோவா 19:25). சரி இயேசுதான் சிலுவையிலறையப்பட்டுவிட்டார், இனி நம்வழியே செல்வோம் என்று சென்று விட்டாளா? இல்லை. இயேசுவின் சரீரத்தை எடுத்து கல்லறையில் வைத்த போதும் அங்கேயும் மகதலேனா மரியாள் கல்லறைக்கு எதிராக உட்கார்ந்திருந்தாள் (மத் 27:61). ஜனங்கள் இயேசுவை பிடித்தவுடனே "சீஷர்களெல்லாரும் அவரை விட்டு ஓடிப்போனார்கள்" (மத் 26:56) காரணம் தங்களுக்கும் இந்த கதி வந்துவிடுமோ என்ற பயம். ஆனால் மகதலேனா மரியாளோ "பூரண அன்பு பயத்தைப் புறம்பே தள்ளும்" என்ற வசனத்திற்கேற்ப எந்த பயமுமில்லாதவளாய் இயேசுவின் சரீரம் கல்லறையில் வைக்கப்படும் மட்டும் அங்கேயே இருந்தாள். அதுமட்டுமல்ல, பிற்பாடு ஓய்வு நாள் முடிந்து " வாரத்தின் முதல் நாள் காலையில் அதிக இருட்டோடே மகதலேனா மரியாள் கல்லறை யினிடத்திற்கு வந்து கல்லறையை அடைத்திருந்த கல் எடுத்துப் போட்டிருக்கக் கண்டாள்" (யோவா 20:1) இதையறிந்த சீஷர்கள் வந்து காலியாகயிருந்த கல்லறையைக் கண்டு மீண்டும் தங்களிடத்திற்கே திரும்பிப் போய்விட்டார்கள்.

ஆனால் மரியாளோ கல்லறையினருகே வெளியே நின்று அழுது கொண்டிருந்தாள்; இயேசுவினிடத்தில் அவள் கொண்டிருந்த அன்பு தான் எத்தனை! அன்பு சகோதரிகளே, இக்காட்சியை உங்கள் மனக்கண் முன் கொண்டு வந்து பாருங்களேன்! நம்முடைய கலாச்சாரத்தின் படி கல்லறை பக்கம் செல்லவே பயப்படுகிற ஸ்திரீகளுக்கு இது ஒரு சவால் அல்லவா! மேலும் அவள் குனிந்து கல்லறைக்குள்ளே பார்த்து, இரண்டு தூதர்களை தரிசிக்கிறாள். அத்தோடு நின்று விடவில்லை பின்பு உயிர்தெழுந்த கர்த்தரையே தரிசிக்கிறாள். எத்தனை பாக்கியம் இது! சற்று சிந்தியுங்கள்! அப்போஸ்தலர்களும் அநேக சீஷர்களும் அநேக ஸ்திரீகளும் இயேசுவின் பின்னே திரிந்து ஊழியஞ் செய்தார்கள். அனைவருமே இயேசுவின் மரணத்திற்குப் பின் தங்களுடைய வழியே சென்று விட்டார்கள். ஆனால் இவளோ, இயேசுவை விட்டு விலகவில்லை. இயேசுவை முதன் முதல் தரிசித்தவளும், இயேசுவின் உயிர்த்தெழுந்த நற்செய்தியை முதன் முதல் அப்போஸ்தலருக்கு சொன்னவளும் மகதலேனா மரியாள்தான். எத்தனை பாக்கியவதி இவள்!

நம் ஆதித்தாய் ஏவாள் பாவத்துக்கு காரணமானால், இவளோ இயேசுவானவர் பாவத்தை தம்முடைய சிலுவை மரணத்தின் மூலம் வென்று, மரித்து, அடக்கம்பண்ணப்பட்டு மூன்றாம் நாள் உயிர்த்தெழுத்தெழுந்த முதல் செய்தியை அவருடைய சீஷர்களுக்கு அறிவித்தாள். அப்படியென்றால் ஸ்திரீகளாகிய நாமும் இந்த பாக்கியத்திற்கு பங்குள்ளவர்கள் என்று தானே பொருள்.

அன்பு சகோதரிகளே! மகதேலானா மரியாள் நமக்கெல்லாம் ஒரு சிறந்த மாதிரியாக விளங்குகிறாள். கர்த்தர் நமக்குச் செய்த நன்மைகளுக்காக , விடுதலைக்காக, ஆசீர்வாதத்திற்காக, இன்னும் எத்தனையோ சிலாக்கியங்களுக்காக அவருக்கு நாம் என்னத்தை செலுத்துவோம்! "உனக்காக நான் மரித்தேனே எனக்காக நீ என்ன செய்தாய்" என்ற தொனி நம் காதில் எப்போதும் விழுந்து கொண்டே இருக்கட்டும். மகதலேனா மரியாளைப் போல் இயேசுவை விட்டு விலகாதிருப்போமானால் பெண்ணாக பிறந்திருக்கிற நாமும் பாக்கியவதிகளாக, அநேகருக்கு பாக்கியங்களைக் கொண்டு செல்லுகிறவர்களாக இருப்போம். கர்த்தர் தாமே நம்மை நற்கந்தமாக மாற்றுவாராக!



பாடம் –27

## காலேப், ஒரு மாபெரும் நேர்மறை நம்பிக்கையாளர்

**Caleb, A Great Faithful Optimist**

*-Jerry*

**-சென்ற மாதஇதழின் தொடர்ச்சி**

காலேபிடமிருந்து (கற்கும்) பாடங்கள்.

1. தேவனுடைய நன்மை, உண்மைதன்மை, ஞானம், வல்லமை மற்றும் அதிகாரத்தின் மீது காலேபுக்கு இருந்ததைப்போல நமக்கும் உண்மையான விசுவாசமிருக்க வேண்டும்.
2. காலேபைப்போல தேவ சித்தத்தை நிறைவேற்றுவதிலுள்ள பிரச்சனைகளை நாம் உணரவேண்டும். இருப்பினும் இந்தப் பிரச்சனைகளிலிருந்து வெற்றி பெற தேவன் நம்மோடிருந்து அவைகளை மேற்கொள்ள உதவுகிறார்.
3. நாம் ஒருபோதும் சத்தியத்தை விட்டு விலகிச் செல்லக்கூடாது. ஏனென்றால்; மற்ற யாவரும் இதைச் செய்துகொண்டிருக்கிறார்கள். நாம் காலேபைப் போல நம்பிக்கையும் தைரியமும் உள்ளவர்களாக இருக்கவேண்டும்.
4. நாம் முற்றிலும் கர்த்தரை பின்பற்ற வேண்டும் (எண்.14:24).
5. அவன் (காலேப்) பவுலைப் போன்றவன் ரோமர் புத்தகத்தில் உங்கள் உள்ளம் புதிதாகிறதினாலே மறுரூபமாகுங்கள் என்பதுபோல.
6. நாம் இறுதிவரை போராடினோமானால், தேவன் நமக்கு ஆவிக்குரிய கானானுக்குள் பிரவேசிக்க அனுமதியளிப்பார்.

ஆனபடியினாலே, அவருடைய இளைப்பாறுதலில் பிரவேசிப்பதற்கேதுவான வாக்குத்தத்தம் நமக்குண்டாயிருக்க உங்களில் ஒருவனும் அதை அடையாமல் பின்வாங்கிப் போனவனாகக் காணப்படாதபடிக்கு பயந்திருக்கக் கடவோம் (எபி.4:10).

## அறிக்கையின் ஆசீர்வாதம்

*-Murugan*

"மனுஷர் முன்பாக என்னை அறிக்கைபண்ணுகிறவன் எவனோ, அவனை நானும் பரலோகத்திலிருக்கிற என் பிதாவின் முன்பாக அறிக்கைபண்ணுவேன்" மத்தேயு 10:32

| | |
|---|---|
| 1. யோவான்ஸ்நானகன் | - யோவா.1:34 |
| 2. சிமியோன் | - லூக்.2:30-32 |
| 3. நூற்றுக்குஅதிபதி | - லூக்.23:47 |
| 4. அப்போஸ்தலர்கள் | - யோவா.16:30 |
| 5. மார்த்தாள் | - யோவா.11:27 |
| 6. சமாரியா ஸ்திரீ | - யோவா.4:25 |
| 7. சிலுவையில் கள்ளன் | - லூக்.23:39 |
| 8. பேதுரு | - மத்.16:16 |
| 9. பவுல் | - அப்.26:15 |
| 10. தோமா | - யோவா.20:28 |
| 11. மகதலேனா மரியாள் | - யோவா.20:18 |
| 12. மந்திரி | - அப்.8:37 |

"என்னவென்றால, கர்த்தராகிய இயேசுவை நீ உன் வாயினாலே அறிக்கையிட்டு, தேவன் அவரை மரித்தோரிலிருந்து எழுப்பினாரென்று உன் இருதயத்திலே விசுவாசித்தால் இரட்சிக்கப்படுவாய். நீதியுண்டாக இருதயத்திலே விசுவாசிக்கப்படும் இரட்சிப்புண்டாக வாயினாலே அறிக்கைபண்ணப்படும்

ரோமர் 10:9,10

# பழைய மனிதனின் பாவம் களையப்படுதல்

## Putting Off The Old Man of Sin

-J.C.Choate



நன்றி மீண்டுமாக கிறிஸ்துவின் நாமத்தில் உங்களிடத்தில் வருகிறேன்.

தற்போதைய நம்முடைய பாடப்பகுதிகளில் நாம் பாவஞ்செய்கிறதான பழைய மனிதனை களைந்துபோட்டு கிறிஸ்துவுக்குள்ளான புதிய மனிதனைத் தரித்துக் கொள்வதைப் பற்றி பேசிக்கொண்டிருக்கிறோம். நமக்குத் தேவையென காண்பித்துக்கொண்டிருக்கிற நம்முடைய அசுத்தத்தை விட்டு விடுவதும், நாம் தேவனுக்குக் கீழ்ப்படிய வேண்டும் என்ற நோக்கத்தில் நம்முடைய வாழ்வில் இருக்கின்ற துன்மார்க்கத்தை விட்டுவிடுவதும் நம்மிடத்தில் விரும்புகின்ற அன்புள்ள மக்களாக இருப்பதுமே நான் சொல்லவேண்டிய காரியமாகும்.

தயவுசெய்து 'பொய் சொல்லுதலை' பற்றி ஒரு சில நிமிடங்கள் என்னோடே கூட கற்றுக்கொள்ள நேரம் ஒதுக்கிக் கொள்ளுங்கள். பொய் சொல்லுதல் என்பது அதிகமாக எங்கும் காணப்படுகிற ஒன்றாகும். அத்தோடு அதிகமாக ஒத்துக்கொள்ளக்கூடியதும் நம்முடைய நாட்டில் பாவங்களில் ஒன்றாகவும் இருக்கிறது. நிச்சயமாக இந்த பழைய உலகத்தில் அதிகமானோர் மற்றும் அநேகமாக மக்கள் பரந்து விரிந்து அதிகமானோர் பொய் சொல்வதில் தவறு ஒன்றுமில்லை எனக்காண்கின்றனர். அநேகமாக எல்லோருமே ஒருமுறையோ அல்லது இன்னொரு தடவையோ பொய் சொல்லுகின்றனர். தத்துவம் கொண்ட சில மதங்கள் கூட, "ஒரு பொய் காரியத்தை சாதிக்குமானால் உண்மையை ஏன் பேசவேண்டும் என்கின்றனர்?"அல்லது "பொய் சொல்லுதல் நிச்சயம் தேவையானால், பொய் அனுமதிக்கப்படுகிறது".

நான் பொய் பேசுகையில், நான் ஒரு வஞ்சனைக்காரன், இது உண்மையில்லாதபோது உண்மைக்காக சிலவற்றை சொல்லுகின்றபோதும் நான் பொய்காரன் எனக் கருதப்படுகிறேன். கருப்பு பொய்கள் சொல்லுகிறவர்களும் உண்டு. வெள்ளை பொய்கள் சொல்லுகிறவர்களும் உண்டு. கருப்புப் பொய்கள் மிக அசுத்தமானதும் தவறானதுமாயிருக்கும், ஆனால் வெள்ளைப் பொய்கள் உண்மையை கொஞ்சம் திரித்து விவரிப்பதாயிருக்கிறது, ஆனால் இயற்கையில் எல்லாம் மனப்பூர்வமானதல்ல. ஒரு பொய் எப்படியிருந்தபோதிலும் அது பொய் தான், சிலர் உண்மையைக் காத்துக்கொள்ளும்படி சில விருந்துகளிலிருந்து தப்பிக்கொள்ள ஒரு காரணம் அல்லது மற்றகாரணம் கூறுகின்றனர் என அர்த்தமாகிறது.

கிறிஸ்துவின் மார்க்கம் எல்லா வழிகளிலும் பொய்சொல்லுதலை கண்டிக்கிறது. நம்மை இரட்சிக்கிறதான இதுவே சத்தியம், பொய் அல்ல. பொய் இரட்சிக்குமானால் பிறகு சத்தியம் (உண்மை) பொய்யைக் காட்டிலும் சிறப்பானதாக இருக்கமுடியாது. பொய் சொல்லுவதனால் தவறில்லை என்று சொல்லி தொடர்ந்து



பெண்கள் பகுதி

# பாக்கியம் - *Blessing*

*-Glory Arjunan*




பெண்ணாகப் பிறப்பதே ஒரு பாக்கியம்! ஆச்சரியமாயிருக்கிறதா? பெண் குழந்தை ஒன்று பிறந்துவிட்டாலே இடி விழுந்தாற் போல் எண்ணி துக்கப்படுகிறவர்கள் அநேகர். இப்படியிருக்க இது எவ்வாறு சாத்தியமாகும் என்கிறீர்களா? சகோதரிகளே, இது உண்மையிலும் உண்மை, நமது வேதாகமத்தில் ஏழு மரியாள்களைக் காணமுடிகிறது. அந்த ஏழு மரியாள்களின் வரிசையில் ஏழு பிசாசுகளின் பிடியிலிருந்து அற்புதமாய் விடுவிக்கப்பட்டு, அப்போஸ்தலர்களாலும், மற்றவர்களாலும் பெறமுடியாத பாக்கியத்தைப் பெற்ற அந்த பாக்கியவதி மகதலேனா மரியாள். ஆம் உயிர்த்தெழுந்த கர்த்தரை தரிசிக்கும் பாக்கியம் முதன் முதலாகப்பெற்றவள். தாம் பெற்ற பாக்கியம் பெருக இவ்வையகம் என இயேசு உயிர்த்தெழுந்த நற்செய்தியை முதன் முதலாக சீடர்களுக்கு அறிவித்தவளும் அவளே. இத்தனை பாக்கியத்தைப் பெற்றவள் ஒரு ஸ்திரீ என்றால் நாமும் இதற்கு விதிவிலக்கல்ல.

பாருங்கள், மகதலேனா மரியாள் இயேசுவின் பின்னாலே சென்று ஊழியம் செய்த இயேசுவின் சீஷியானவள். இயேசு தம்மிடத்திலிருந்து ஏழு பிசாசுகளையும் துரத்திவிட்டதினிமித்தம் இயேசுவின் மேல் அளவில்லா அன்பு கொண்டிருந்தாள். அன்பு அவளை நெருக்கி ஏவ தன்னுடைய ஆஸ்திகளால் அவருக்கு ஊழியம் செய்து கொண்டு வந்தாள் (லூக் 82-3). அன்பான சகோதரிகளே, நமதாண்டவர் இயேசு கிறிஸ்து தம்முடைய இரத்தத்தை சிந்தி நம்மை சகல பாவங்களின் பிடியிலிருந்து விடுதலை செய்திருக்கிறார். நாம் கிறிஸ்துவுக்குள் வருவதற்கு முன்னிருந்த நம்முடைய ஜீவியத்தைத் திரும்பி நோக்குவோமானால் பிசாசின் காரியங்கள் ஏராளமாயிருப்பதைக் காணமுடியும். அருவருப்பான பாவச்சேற்றிலிருந்த நம்மை இன்று விடுதலையாக்கி கறைதிரையில்லாமல் பரிசுத்தமாக்கியிருக்கிற நம்முடைய கர்த்தரிடத்தில் மகதலேனா மரியாளைப் போல் அளவில்லா அன்பு கொள்ளுவோமானால் நிச்சியமாய் நாமும் பாக்கியவதிகளாயிருப்போம். மட்டுமல்ல, நம் அன்பிற்கு அடையாளமாக நம்முடைய உடைமைகளால் அவருக்கு ஊழியஞ் செய்வோம். அநேக வீடுகளில் ஸ்திரீகளே வீட்டின் பொக்கிஷதாரிகளாக இருப்பார்கள். தங்களுடைய பிள்ளைகளின் எதிர்காலத்தையே ஓயாது நினைத்து பாலிசிக்கு மேல் பாலிசியை (Policy) அடுக்கிக் கொண்டிருப்பார்கள். அன்பின் சகோதரிகளே, பரலோகத்திலே உங்கள் பொக்கிஷங்களை சேர்த்து வையுங்கள் என வேதம் கூறுவதை நினைவு கூருங்கள். ஆஸ்திகளை விற்று இயேசுவுக்கு ஊழியஞ்செய்த இவளையும் மாதிரியாகக் கொள்ளுங்கள்.

இந்த மகதலேனா மரியாள் முதலாவது தேவனுடைய ராஜ்யத்தை தேடுகிறவளாக இருந்திருக்கிறாள். எனவேதான் இயேசு சென்றவிடமெல்லாம் சென்று ஊழியஞ்செய்ததோடல்லாமல் முடிவு பரியந்தம் இயேசுவை விட்டுவிலகாதிருந்தாள். இயேசுவை சிலுவையிலறைந்த பிறகும் இயேசுவின்

சீர்திருத்தலுக்கும், நீதியைப்படிப்பிக்குதலுக்கும் பிரயோஜனமுள்ளவைகளாயிருக்கிறது''(2தீமோ.3:16,17).

**ஒருவரோடொருவர் ஐக்கியங்கொள்ளுவதின் மூலம் பெலனைப் பெற்றுக்கொள்ள:** ''ஏனெனில், இரண்டுபேராவது மூன்றுபேராவது என் நாமத்தினாலே எங்கே கூடியிருக்கிறார்களோ, அங்கே அவர்கள் நடுவிலே இருக்கிறேன் என்றார்''(மத்,18:20). எபிரெயர்10:24 ன்படி நாம் ஒருவருக்கொருவர் அன்பிலும் நற்கிரியைகளிலும் உற்சாக மூட்டுகிறவர்களாயிருக்கிறோம். நாம் சகோதரரை ஒருபோதும் சந்திக்காதவர்களாகவும், அவர்கள் செய்கின்ற பணிகளில் பங்குகொள்ளாதவர்களாயிருப்போமானால், நாம் எவ்வாறு சகோதரரை உற்சாகப்படுத்தி, பெலப்படுத்தக் கூடும்?

தேவனை ஆராதிக்கும்படிக்கு பரிசுத்தவான்களோடு கூடிவருவதை புறக்கணிக்கும் போது நம்முடைய வாழ்வில் சரியான சமநிலையைக் கொண்டிருக்க முடியாது ஒவ்வொரு சமயமும் ஒரு கிறிஸ்தவன் ஆராதனையைப் புறக்கணிப்பதையே தெரிவுசெய்கிறான், மேலும் அவன் தேவனையோ, ஆராதனையையோ சபையையோ தன் வாழ்வில் முதன்மையாக வைக்காத தன்னுடைய மாதிரியையே தன்னுடைய செல்வாக்கின் கீழ் இருப்பவர்களுக்கும் போதிக்கிறான். குறிப்பாக அவன் ஆராதனையிலும், வேதஆராய்ச்சியிலும், தேவனை அறியும் அறிவில் வளர்வதிலும் கலந்து கொள்ளாததின் மூலம் தன்னுடைய பிள்ளைகளின் ஆத்துமாக்களை ஆபத்திற்குள்ளாக்குகிறான்.

ஒரு வளர்ந்த கிறிஸ்தவன் தன்னுடைய சரீரத்தில் ஆராதனைக்குச் செல்ல இயலாத சூழ்நிலையைத் தவிர்க்கும்படி தான் ஒருபோதும் சபை கூடி வருதலை இழந்துவிடக்கூடாது என வெகு காலத்திற்கு முன்னே தீர்மானித்து விடுகிறான். ஞாயிற்று கிழமையில் அவன் இவ்வினாவைப்பற்றிய எந்த ஒரு புதிய தீர்மானத்தையும் உருவாக்குகிறதில்லை; அவன் தான் தேவனுடைய ஜனத்தைச் சேர்ந்தவன் என்பதை அறிகிறான், அவன் தன்னுடைய சிருஷ்டிகரை துதித்து அவருடைய இரட்சிப்பின் மாபெரும் கிரயத்தை நினைவுகூருகின்றான். எனவே அவன் ஆராதிக்கும்படி சபை கூடிவரும்போது சபையோடு ஐக்கியம் கொண்டிருப்பான்.

நீங்கள் தேவன் அறிவுறுத்தியிருக்கிறபடி தேவனை ஆராதிப்பதின் முக்கியத்துவத்தைப் பற்றிய காரியத்தில் தவறான தீர்மானத்தை உருவாக்கியிருப்பீர்களானால், தயவு செய்து திரும்பச் சென்று ஜெபத்துடனே உங்களுடைய தெரிந்து கொள்ளுதலைப் பற்றி சிந்தித்துப்பாருங்கள். இதுவே தவறான ஒன்றும், உங்களுடைய நித்திய ஆக்கினையில் முடிவுபெறக்கூடிய ஒன்றாகவும் இருக்கிறது. உங்களுடைய இரட்சிப்பு மாபெரும் கிரயமாகிய தம்முடைய குமாரனின் மரணத்தில் தேவனால் நிறை வேற்றப்பட்டதாயிருக்கிறது.

ஜெபியுங்கள்

**நீதிமான் செய்யும் ஊக்கமான வேண்டுதல்**
**மிகவும் பெலனுள்ளதாயிருக்கிறது - யாக்கோபு 5:16**



இம்மாத நடைபெறும் திருச்சி கூட்டத்திற்காக...
கிறிஸ்துவின் சபையார் நடத்தும் விடுமுறை வகுப்புகளுக்காக...
பெண்களுக்கு நடக்கும் விபரீதங்களில் அவர்கள் காக்கப்பட...



ஜீவித்து நீங்கள் நேர்மையாகவும், உண்மையாகவும் நடக்கிறீர்கள் என்று நம்புகிறீர்கள் இந்தக் காரியத்தில் நீங்கள் நேர்மையாகவும் உண்மையாகவும் பொய்யை நம்பி பிறகு காப்பாற்றபடமுடியும். ஆனால் அது உண்மையல்ல. வேதாகமம் அதைப் போதிக்கிறதில்லை.

பழைய ஏற்பாட்டு காலத்துக்கு திரும்புங்கள், பொய் கண்டிக்கப்பட்டது. "பின்னும் கர்த்தர் மோசேயை நோக்கி: ஒருவன் கர்த்தருக்கு விரோதமாக அநியாயம் செய்து, தன் வசத்தில் ஒப்புவிக்கப்பட்ட பொருளிலாவது, கொடுக்கல் வாங்கலிலாவது, தன் அயலானுக்கு மாறாட்டம்பண்ணி, அல்லது ஒரு வஸ்துவைப் பலாத்காரமாய்ப் பறித்துக்கொண்டு, அல்லது தன் அயலானுக்கு இடுக்கண்செய்து, அல்லது காணாமற்போனதைக் கண்டடைந்தும் அதை மறுதலித்து, அதைக் குறித்துப் பொய்யாணையிட்டு, மனிதர்செய்யும் இவைமுதலான யாதொரு காரியத்தில் பாவஞ்செய்தானேயாகில், அவன் செய்த பாவத்தினாலே குற்றவாளியானபடியால், தான் பலாத்காரமாய்ப் பறித்துக்கொண்டதையும், இடுக்கண்செய்து பெற்றுக்கொண்டதையும், காணாமற்போயிருந்து தான் கண்டெடுத்ததையும், பொய்யாணையிட்டுச் சம்பாதித்த பொருளையும் திரும்பக் கொடுக்கக்கடவன்; அந்த முதலைக் கொடுக்கிறதும் அல்லாமல், அதினோடு ஐந்தில் ஒரு பங்கு அதிகமாகவுங் கூட்டி, அதைத் தான் குற்றநிவாரணபலியை இடும் நாளில், அதற்குரியவனுக்குக் கொடுத்து விட்டு, தன் குற்றநிவாரணபலியாக, உன் மதிப்புக்குச் சரியான பழுதற்ற ஆட்டுக் கடாவைக் கர்த்தருக்குச் செலுத்தும்படி, அதை ஆசாரியனிடத்தில் குற்றநிவாரணபலியாகக் கொண்டுவருவானாக. கர்த்தருடைய சந்நிதியில் அவன் பாவத்தை ஆசாரியன் நிவிர்த்திசெய்யக்கடவன்; அப்பொழுது அவன் குற்றவாளியாகச் செய்த அப்படிப்பட்ட எந்தக் காரியமும் அவனுக்கு மன்னிக்கப்படும் என்றார்" என லேவி.6:1-7ல் நாம் வாசிக்கிறோம். நாம் பொய்சொல்லுதல் அந்நாட்களில் ஏற்றுக்கொள்ளப்படவில்லை, ஆனால் குற்றம் செய்தவர்கள் தேவையான சீர்திருத்தத்தைச் செய்து அவர்கள் மன்னிக்கப் படும்படிக்கு சரியான தியாக பலியை செய்தனர். மீண்டும், மோசே இஸ்ரவேல் ஜனங்களை கடிந்துகொண்டு "நீங்கள் களவுசெய்யாமலும், வஞ்சனை பண்ணாமலும், ஒருவருக்கொருவர் பொய் சொல்லாமலும் இருங்கள்" என லேவி.19:11 ல் இவ்விதமாகச் சொன்னார்.

ஞானி சாலமோன், "மெய்ச்சாட்சிக்காரன் பொய்சொல்லான்; பொய்ச்சாட்சிக்காரனோ பொய்களை ஊதுகிறான்" (நீதி.14:5) என்று சொல்லுகிறார். மீண்டும் அவர், "பொய்ச்சாட்சிக்காரன் ஆக்கினைக்குத் தப்பான்; பொய்களைப் பேசுகிறவனும் தப்புவதில்லை" (நீதி.19:5) என்று சொல்லுகிறார். பத்து கட்டளைகளில் 'பொய்' என்ற வார்த்தை காணப்படவில்லை, ஆனால் அந்த கட்டளைகளில் ஒன்று "பிறனுக்கு விரோதமாகப் பொய்ச்சாட்சி சொல்லாதிருப்பாயாக" (யாத்.20:16) என்று சொல்லப்பட்டுள்ளது. ஆனால் அந்தக் கட்டளை அர்த்தம் என்ன? இதன் அர்த்தம் தவறாகச் சொல்லுதல் அல்லது அன்னியனுக்கு எதிராக பொய்யைச் பயன்படுத்துதல். அதன் அர்த்தம், இந்த கற்பனை பிறனுக்கு விரோதமாக பொய்ச்சாட்சி சொல்லக்கூடாது அதன்பின் ஒருவன் உண்மையாகவே பொய் சொல்லக்கூடாது அல்லது உண்மையற்ற செயல்களில் தன்னுடைய அந்நியனோடு நடந்து கொள்ளக்கூடாது என்று வாதிடுகிறது.

அப்போஸ்தலனாகிய பேதுரு கிறிஸ்துவுக்குள் உண்மையாக இருக்க வேண்டுமென்று உறுதியாக இருந்தான். அவன் கர்த்தரிடம், நான் உம்மை விட்டு விலகுவதுமில்லை; மறுதலிப்பதுமில்லை என்றான். மற்றவர்கள் அவரை விட்டு விலகிபோய்விட்டபோதிலும் பேதுரு நான் விலகமாட்டேன் என்று சொன்னபடி அவன் விலகவில்லை. கிறிஸ்து அவனிடம் தாம் காட்டிக் கொடுக்கப்பட்ட இரவு சேவல் கூவுகிறதற்கு முன் அவன் தம்மை மூன்றுதரம் மறுதலிப்பான் என்று சொன்னார். மத்தேயு புத்தகம் 26-ல் நாம் வாசிக்கிறோம். அப்போஸ்தலர்களில் ஒருவனாகிய யூதாஸ்காரியோத் திரளான ஜனங்கள் பட்டயங்களோடும் தடிகளோடும் கிறிஸ்து ஜெபித்துக் கொண்டிருக்கும் இடத்திற்கு வந்து, தான் யாரை முத்தஞ்செய்வேனோ அவர்தான் கிறிஸ்து என்று அடையாளங்காட்டும்படி யூதாஸ் கிறிஸ்துவை வாழ்த்தி முத்தஞ்செய்தான், பிறகு அவர்கள் இயேசு மேல் கைபோட்டு அவரைப் பிடித்தார்கள். தொடந்து வாசியுங்கள், வேதாகமம் கூறுகிறது; "அப்பொழுது , அவருடைய முகத்தில் துப்பி, அவரைக் குட்டினார்கள்;சிலர் அவரைக் கன்னத்தில் அறைந்து: கிறிஸ்துவே, உம்மை அடித்தவன் யார்? அதை ஞானதிருஷ்டியினால் எங்களுக்குச் சொல்லும் என்றார்கள். அத்தருணத்தில் பேதுரு வெளியே வந்து அரமனை முற்றத்தில் உட்கார்ந்திருந்தான். அப்பொழுது, வேலைக்காரி ஒருத்தி அவனிடத்தில் வந்து: நீயும் கலிலேயனாகிய இயேசுவோடேகூட இருந்தாய் என்றாள். அதற்கு அவன்: நீ சொல்லுகிறது எனக்குத் தெரியாது என்று எல்லாருக்கும் முன்பாக மறுதலித்தான். அவன், வாசல் மண்டபத்திற்குப்போனபொழுது வேறொருத்தி அவனைக் கண்டு; இவனும் நசரேயனாகிய இயேசுவோடேகூட இருந்தான் என்று அங்கே இருந்தவர்களுக்குச் சொன்னாள். அவனோ: அந்த மனுஷனை நான் அறியேன் என்று ஆணையிட்டு, மறுபடியும் மறுதலித்தான். சற்றுநேரத்துக்குப் பின்பு அங்கே நின்றவர்கள் பேதுருவினிடத்தில் வந்து; மெய்யாகவே நீயும் அவர்களில் ஒருவன்: உன் பேச்சு உன்னை வெளிப்படுத்துகிறது என்றார்கள். அப்பொழுது அவன்: அந்த மனுஷனை அறியேன் என்று சொல்லி, சபிக்கவும் சத்தியம்பண்ணவும் தொடங்கினான். உடனே சேவல் கூவிற்று. அப்பொழுது பேதுரு: சேவல் கூவுகிறதற்கு முன்னே நீ என்னை மூன்றுதரம் மறுதலிப்பாய் என்று இயேசு தன்னிடத்தில் சொன்ன வசனத்தை நினைத்துக் கொண்டு, வெளியே போய், மனங்கசந்து அழுதான் (மத்.26:67-75). இப்போது பேதுருவின் பாவம் என்ன? சாதாரணமான பொய் தான். பொய் சொல்லுவதோடு சத்தியம் பண்ணவும் செய்தான். நிச்சயமாக பேதுருவின் செயல் மோசமானதும் தவறானதுமாகும் என நாம் அறிவோம், ஆனால் உடனே அவன் மனங்கசந்து அழுது அறிக்கையிட்டு கர்த்தரிடம் திரும்பினான் அதன்பின் அவன் கிறிஸ்துவின் ராஜ்யத்தில் ஒரு மிகப்பெரிய பிரசங்கியாக மாறினான்.

கிறிஸ்துவின் சபை ஸ்தாபிக்கப்பட்டபின், அநேக கிறிஸ்தவர்கள் தங்கள் சொத்துக்களை விற்று அந்த பணத்திலிருந்து உணவும் மற்ற தேவைகளுக்காகவும் எருசலேமிலுள்ள கிறிஸ்தவர்களுக்கு உதவியாகக் கொடுத்தார்கள், அவர்களில் தங்கள் கிரயத்திலே ஒரு பங்கை வஞ்சித்து வைத்த அனனியா, சப்பீராள் ஆகியோரின் கதையைப்பற்றி அறிவோம். அவர்கள் இதை உதவிசெய்யும்படி எப்படிக் கொடுத்தார்கள். ஆனால் வேதாகமம் இந்த விஷயத்தில் அவர்கள் ஒரு



கேட்டுக்கொண்டார். மத்தேயு6:33 ல் அவர் “முதலாவது தேவனுடைய ராஜ்யத்தையும் அவருடைய நீதியையும் தேடுங்கள், அப்பொழுது இவைகளெல்லாம் உங்களுக்குக்கூடக் கொடுக்கப்படும்” என்றார்.

நாம் எவ்விதமான “சிரமம்” அல்லது ‘அசௌரிகம்’ அல்லது “செலவு” போன்றவைகளைவிட அவரைப் பிரியப்படுத்துவதே அவசியமானது என அவைகளைக்கடந்து செல்ல விருப்பமில்லாதவர்களாக இருந்தால் நாம் கிறிஸ்துவை முதலாவது தேட முடியாது அல்லது அவரைப்பின்பற்றவும் முடியாது.

எபிரெயர்10:25, “சபை கூடிவருதலைச் சிலர் விட்டுவிடுகிறதுபோல நாமும் விட்டுவிடாமல், ஒருவருக்கொருவர் புத்தி சொல்லக்கடவோம்; நாளானது சமீபித்துவருகிறதை எவ்வளவாய்ப் பார்க்கிறீர்களோ அவ்வளவாய்ப் புத்திசொல்ல வேண்டும்” என விளக்குகிறது.

“சத்தியத்தை அறியும் அறிவை அடைந்தபின்பு நாம் மனப்பூர்வமாய்ப் பாவஞ்செய்கிறவர்களாயிருந்தால், பாவங்களினிமித்தம் செலுத்தத்தக்க வேறொரு பலி இனியிராமல், நியாயத்தீர்ப்பு வருமென்று பயத்தோடே எதிர்பார்க்குதலும், விரோதிகளைப் பட்சிக்கும் கோபாக்கினையுமே இருக்கும்”.

“மோசேயினுடைய பிரமாணத்தைத் தள்ளுகிறவன் இரக்கம் பெறாமல் இரண்டு மூன்று சாட்சிகளின் வாக்கினாலே சாகிறானே; தேவனுடைய குமாரனைக் காலின் கீழ் மிதித்து, தன்னைப் பரிசுத்தஞ்செய்த உடன் படிக்கையின் இரத்தத்தை அசுத்தமென்றெண்ணி, கிருபையின் ஆவியை நிந்திக்கிறவன் எவ்வளவு கொடிதான ஆக்கினைக்குப் பாத்திரவானாயிருப்பான் என்பதை யோசித்துப்பாருங்கள்”

கிறிஸ்தவர் ஒருவருக்கொருவர் ஏன் கூடிவரவேண்டும் என்பதற்கு நியாயமான காரணங்கள் பல உண்டு.

**தேவனை ஆராதிக்க:** எபிரெயர்12:24 சபை கூடிவருதலைப் பற்றி ஒரு அழகான சித்திரம் வரைகிறது, “நீங்களோ சீயோன் மலையினிடத்திற்கும், ஜீவனுள்ள தேவனுடைய நகரமாகிய பரம எருசலேமினிடத்திற்கும், ஆயிரம்பதினாயிரமான தேவதூதர்களினிடத்திற்கும், பரலோகத்தில் பேரெழுதியிருக்கிற முதற் பேறானவர்களின் சர்வசங்கமாகிய சபையினிடத்திற்கும், யாவருக்கும் நியாயாதிபதியாகிய தேவனிடத்திற்கும், பூரணராக்கப்பட்ட நீதிமான்களுடைய ஆவிகளினிடத்திற்கும், புது உடன்படிக்கையின் மத்தியஸ்தராகிய இயேசுவினிடத்திற்கும் ..... வந்து சேர்ந்தீர்கள்”.

**கிறிஸ்துவின் தியாகத்தை நினைவு கூர:** அப்போஸ்தலர்20:7ல், பவுல் சபையோடு சேர்ந்து ஆராதிப்பதற்கு ஒரு வாரம் துரோவா பட்டணத்தில் தங்கியிருந்தான் என வேதவாக்கியம் கூறுகிறது; “வாரத்தின் முதல் நாளிலே, அப்பம்பிட்கும்படி சீஷர்கள் கூடி வந்திருக்கையில், பவுல் மறுநாளிலே புறப்படவேண்டுமென்றிருந்து, அவர்களுடனே சம்பாஷித்து, நடுராத்திரி மட்டும் பிரசங்கித்தான்”.

**கூடி ஆராய்வதன் மூலம் தேவனுடைய வார்த்தைகளை கற்றுக்கொள்ள:** “....சத்திய வசனத்தை நிதானமாய்ப் பகுத்துப் போதிக்கிறவனாயும் உன்னைத் தேவனுக்கு முன்பாக உத்தமனாக நிறுத்தும்படி ஜாக்கிரதையாயிரு”(2தீமோ.2:15). ஏன்? ஏனென்றால், “வேதவாக்கியங்களெல்லாம் தேவ ஆவியினால் அருளப்பட்டிருக்கிறது; தேவனுடைய மனுஷன் தேறினவனாகவும், எந்த நற்கிரியையுஞ் செய்யத் தகுதியுள்ளவனாகவும் இருக்கும்படியாக, அவைகள் உபதேசத்துக்கும், கடிந்துகொள்ளுதலுக்கும்,

பெண்கள் பகுதி

# ஆராதனைக்கு செல்வது மிகச்சிரமமாயிருக்கிறது

## Going To Worship Is Too Much Trouble

*-Betty*



ஜனங்கள் தங்களுடைய வயோதிப நாட்களில் கிட்டத்தட்ட ஒவ்வொரு நாளும் எழுந்து வேலைக்குச் செல்லுகின்றனர். சிலர் வயல்களுக்கு அதிகதூரம் நடந்து செல்கின்றனர், மற்றவர்கள் - சைக்கிள், மோட்டார் ஸ்கூட்டர், பஸ், அல்லது தங்களுடைய சொந்த கார் போன்றவற்றில் தங்களுடைய வேலைக்கு சவாரி செய்யலாம் ஆனால் ஒருவருடைய வேலைஸ்தலத்திற்கு செல்ல எடுத்துக்கொள்ளும் சிரத்தை மிகப்பயங்கரமானதாக இருக்கலாம். என்றாலும், ஒருவன் வாழவேண்டுமென்றால், உணவு வாங்குவதற்கும் வாடகை செலுத்துவதற்கு அல்லது வீட்டிற்கு வாடகை செலுத்துவதற்கும், தன்னுடைய பொறுப்பைவகிப்பதற்கும் அதன்பின் சம்பளம் பெறுவதற்கும் ஒருவன் கட்டாயம் வேலை செய்தாக வேண்டும்.

மாறாக, ஒரு புதிய வாரத் துவக்கத்திற்கு அடையாளமாகவும், தம்முடைய ஜனங்கள் தம்மிடத்தில் நெருங்கி வந்து சேவிக்கவும் ஒருவருக்கொருவர் நெருக்கமாயிருக்கவும் தேவன் தமக்கென்று ஒரு நாளை நியமித்திருக்கிறார். புதியஏற்பாட்டில் கிறிஸ்தவர்கள் வாரத்தின் முதல் நாளில் - நாம் ஞாயிறு என அழைக்கிற அந்நாளில் ஆராதிக்கும்படி கூடிவந்ததற்கான ஆதாரங்களையும், திருஷ்டாந்தங்களையும் நாம் கொண்டிருக்கிறோம்.

இருந்தபோதிலும், அசௌரியகத்தோடும் ஆராதிக்கச் செல்லுமிடத்திற்கான செலவுகளினிமித்தமாகவும் தங்களை சிரமப்படுத்திக்கொள்ளுவது தேவையற்ற ஒன்று எனக் காண்கிற கிறிஸ்தவர்கள் உண்டு. சிலர், ‘‘நான் வீட்டிலே என்னுடைய ஜெபங்களை ஏறெடுத்துக் கொள்ளுவேன்’’ எனக் கூறி தங்களுடைய மனசாட்சியை சாந்தப்படுத்திக் கொள்கின்றனர். ‘‘ஆனால் வீட்டிலுள்ள என் வேலைகளைசெய்வதற்கும், மார்க்கெட் செல்வதற்கும் ஓய்வெடுப்பதற்கும் எனக்கு ஒரே ஒரு நாள் மட்டுமே இருக்கிறது’’ என்ற வேறு காரணமும் உண்டு. தொடர்ந்து மற்றவர்கள் தாங்கள் ஆஜராகாத காரணத்திற்கு ‘‘பிரசங்கியாருடைய பிரசங்கம் சுவாரஸ்யமில்லாதிருக்கிறது’’எனக்கூறி சபை ஊழியரை குற்றப்படுத்துவார்கள். ஆராதனையில் நான் எதையும் பெற்றுக்கொள்ளமுடியவில்லை- நான் வெறுமனே வீட்டிலே தங்கியிருப்பேன் எனக் கூறுகின்றனர்.

சிலருடைய குடும்பங்களில், கணவன் ஆராதனைக்குச் செல்லுவான், ஆனால் அவன் தன்னுடைய மனைவியையும் குழந்தைகளையும் அழைத்துச் செல்வதின் அவசியத்தை உணருவதில்லை. குறிப்பாக தன்னோடு கூட்டிச்செல்லும்போது உண்மையாகவே இது ஒரு பிரச்சனையாக அவன் தான் மட்டும் இப்போது ஆராதனையில் கலந்துகொள்ளுவோம், பிள்ளைகள் பெரியவர்களாகும் போது செல்லலாம் எனக் கருதுகிறான்.

இந்த எல்லாவிதமான சாக்குப்போக்குகளும் இந்த மன நிலைகளும் எத்தனை தவறானது? தம்முடைய ஊழியம் முழுவதிலும் இயேசுவின் செய்தி ‘‘வாருங்கள் என்னைப்பின்பற்றுங்கள்’’என்பதாகவே இருந்தது. அவர் ஒவ்வொரு காரியம் மற்றும் ஒவ்வொரு நபரைக் காட்டிலும் தமக்கே முதலிடம் கொடுக்குமாறு ஜனங்களைக்



பங்கை வஞ்சித்து வைத்தார்கள் எனக்கூறுகிறது. உண்மைக்குப் புறம்பாக இது நன்றாக எழுதப்பட்டுள்ளது. அவர்கள் எல்லாவற்றையும் கொடுப்பதைப் போல நடித்தார்கள். இவ்வழியில் அவர்கள் ஒரு பங்கை தங்களுக்கென்று எடுத்து வைத்துவிட்டு கொடுப்பதில் பெருமையைப் பெற்றுக்கொள்வோம் என்று நினைத்திருக்கலாம். பிறகு வேதாகமம் சொல்லுகிறது; "பேதுரு அவனை நோக்கி: அனனியாவே, நிலத்தின் கிரயத்தில் ஒரு பங்கைவஞ்சித்துவைத்து, பரிசுத்தஆவியினிடத்தில் பொய்சொல்லும்படி, சாத்தான் உன் இருதயத்தை நிரப்பினதென்ன?" (அப்.5:3). பிறகு அவன் சப்பீராளிடம் இது குறித்து கேட்டான். அதன் விளைவு இருவரும் மரித்து, வெளியே கொண்டு போய் அடக்கம் செய்யப்பட்டார்கள், சபையார் எல்லாருக்கும், இவைகளைக் கேள்விப்பட்ட மற்றயாவருக்கும் மிகுந்த பயமுண்டாயிற்று (அப்.5:11). அவர்கள் ஏன் மரணத்தினால் அடிக்கப்பட்டார்கள்? ஏனென்றால் அவர்கள் பரிசுத்த ஆவியினிடத்தில் பொய் சொன்னார்கள்.

இன்றைய நாட்களில் பொய் சொல்லும் ஜனங்களை தேவன் மரணத்தினால் அடிப்பாரானால், எத்தனை பேர் மீதமிருப்பார்கள்? கற்பனை செய்துபாருங்கள் தங்களது வயதைக் குறித்து பொய் சொல்லுகிறவர்கள், வருமான வரியை அரசுக்கு செலுத்தும்படி தங்கள் வருமானம் பற்றி பொய் சொல்லுகிறவர்கள் பற்றி கற்பனை செய்து பாருங்கள். தங்களுடைய பணியைக் குறித்தும் தங்களுடைய கணவனிடமும், தங்களுடைய மனைவியிடமும் தங்கள் குழந்தைகளிடமும் பொய் சொல்லுகிறவர்களைப் பற்றி சிந்தித்துப்பாருங்கள். தவறான சாட்சியையுடைய ஒருவரைப் பற்றியும், தங்களுடைய நடக்கையின் மூலம் ஒருவர் இன்னொருவரை ஏமாற்றுகிற அல்லது வஞ்சிக்கிற ஒருவர் பற்றியும் சிந்தித்துப்பாருங்கள். இவர்கள் எல்லாருக்கும் மத்தியில் கிறிஸ்துவினிடத்தில் விசுவாசம் கொண்டுள்ளேன் என்கிறவர் தங்கள் காணிக்கை விஷயத்தில் தேவனிடத்தில் பொய் சொல்லுகிறவர்களையும், தாங்கள் ஒன்றும் கொடுக்காமலே கொடுக்கவேண்டுமென சொல்லி கொடுப்பதுபோலவும், அவர்கள் தேவனையும் தங்களுடைய ஐக்கிய மனிதனையும் நேசிக்க வேண்டுமென சொல்லி அதைச் செய்யாமலும் கூட இருப்பதை சிந்தியுங்கள். அநேக ஜனங்கள் தங்கள் பொய்யிலிருந்து விடுபட்டுக்கொள்ளமுடியும் என நினைக்கின்றனர், ஆனால் அவர்களால் முடியாது. சீக்கிரமாக அல்லது தாமதமாக அது அவர்களைப் பிடித்துக்கொள்ளும், ஆனால் அவர்கள் பொய் சொல்லியிருக்கிறார்கள் என்றும் எல்லாவற்றிற்கும் மேலாக அவர்கள் பொய் சொல்லும் போது தேவன் அதை அறிகிறார் என்றும் அவர்கள் அறிவார்கள். யோவான்: "நாம் பாவஞ்செய்யவில்லை யென்போமானால், நாம் தேவனை பொய்யராக்குகிறவர்களாயிருப்போம்" (1யோவா.1:10). பிறகு எல்லா மாய்மாலத்தையும் சிந்தித்துப்பாருங்கள், நீதிமானைப் போல நடிக்கிறவர்கள், பொய் சொல்லுகிற குழுவைவிட ஒன்றும் மேலானவர்கள் அல்ல.

பழைய பிசாசினால் முழுவதும் உலகம் வஞ்சிக்கப்பட்டிருக்கிறது என நாம் அறிவுறுத்தப்பட்டோம் (வெளி.12:9). அந்த பிசாசு மனிதனிடம், அவன் சரியாகயிருக்கிறான், போதுமான அளவு நல்லவனாக இருக்கிறான், அவன் தேவனுக்குக் கீழ்ப்படிய வேண்டிய அவசியமில்லை என தொடர்ந்து கூறுகிறான்.

பொய் சொல்லுவது என்பது ஒன்றுமில்லை. ஆதாமும் ஏவாளும் அவனை நம்பினார்கள். பாருங்கள் அவர்களுக்கும் முழு உலகத்திற்கும் என்ன நடந்ததென்று (ஆதி.3).

தேவனுடைய வார்த்தை பொய் சொல்லுவதை கண்டிக்கிறது. பவுல் தன் நாட்களில் கிறிஸ்தவர்களுக்கு, "ஒருவருக்கொருவர் பொய் சொல்லாதிருங்கள்; பழைய மனுஷனையும் அவன் செய்கைகளையும் களைந்துபோட்டு, தன்னைச் சிருஷ்டித்தவருடைய சாயலுக்கொப்பாய்ப் பூரண அறிவடையும்படி புதிதாக்கப்பட்ட மனுஷனைத் தரித்துக்கொண்டிருக்கிறீர்களே" (கொலோ.3:9,10) என்று சொன்னார். யோவான், "சத்தியத்தை நீங்கள் அறியாததினாலல்ல, நீங்கள் சத்தியத்தை அறிந்திருக்கிறதினாலும், சத்தியத்தினால் ஒரு பொய்யுமுண்டாயிராதென்பதை நீங்கள் அறிந்திருக்கிறதினாலும், உங்களுக்கு எழுதியிருக்கிறேன். இயேசுவைக் கிறிஸ்து அல்ல என்று மறுதலிக்கிறவனேயல்லாமல் வேறே யார் பொய்யன்? பிதாவையும் குமாரனையும் மறுதலிக்கிறவனே அந்திக்கிறிஸ்து' (1யோவா.2:21,22) என்று எழுதினார். கடைசியாக, "பொய்யர் அனைவரும் இரண்டாம் மரணமாகிய அக்கினியும் கந்தகமும் எரிகிற கடலிலே பங்கடைவார்கள் என்றார்" (வெளி.21:8) என வாசிக்கிறோம்.

அநேகமான மதத்தில் பொய்களையே பேசுகின்றனர் என்பது கவலைக்குரிய ஒரு பகுதியாயிருக்கிறது. அவர்கள் தேவனுடைய வார்த்தைக்குமாறாக பல விஷயங்களை மக்களுக்கு சொல்லுகின்றனர். தேவன் பொய்யுரையாத தேவன் (தீத்து 1:2;எபி.6:18). ஆனால் அநேகர் தேவன் சொல்லியிருக்கிறதற்கு மாறாக பிரசங்கிக்கிறார்கள். எனவே இப்படிப்பட்ட பிரசங்கியார்களும், போதகர்களும் பொய்யையே பிரசங்கிக்கின்றனர் என அறிகிறோம். அவர்கள் இரட்சிக்கப்பட்டிருக்கவேண்டுமென்றும், சபையைப் பற்றியும், எப்படி ஆராதிப்பது என்பது பற்றியும், தேவனுடைய வல்லமை, வரப்போகிற உலகம் போன்றவற்றைப்பற்றி பொய்யாகப் பிரசங்கம் பண்ணுகின்றனர். அவர்கள் பொய்களை மட்டும் பிரசங்கிக்கவில்லை. ஆனால் அவர்களில் அதிகமானோர் தங்களுடைய சொந்த பொய்களை நம்புகின்றனர். ஆனபடியினால் நீங்கள் வஞ்சிக்கப்படாதபடிக்கு இந்த காரியம் உங்களில் காணப்படாதபடி கவனமாயிருக்க உங்களை உற்சாகப்படுத்துகிறேன். வேதாகமம் என்ன போதிக்கிறது என்று காண வேதாகமத்திற்கு திரும்புங்கள். நீங்கள் கேள்விப்பட்ட கர்த்தருடைய வார்த்தையோடு ஒத்துப்பாருங்கள். அதன்பின் வேத வார்த்தைகளை யார் விவரித்துச் சொன்னது சரியானது என்று கண்டு விசுவாசியுங்கள்.

ஆனால், நீங்கள் பொய் சொல்லுவது என்பது மிகவும் இழிவான ஒன்றல்ல என்று காரணம் கூறுகிறவர்களில் ஒருவராயிருந்தால், பிறகு நீங்கள் ஒரு பொய்யர் என அழைக்கப்பட விரும்புகிறீர்களா? உங்களுடைய தாய் அல்லது தகப்பன், உங்கள் மனைவி அல்லது உங்களது குழந்தைகள் எல்லாரும் பொய்யர் என முத்திரையிடப்பட விரும்புகிறீர்களா? நிச்சயமாக இல்லை. ஒரு மனிதனிடத்தில் நீங்கள் நம்பிக்கை கொண்டிருக்க முடியாது. ஒரு திரளான கூட்டம் அல்லது சமுதாயம் மிக இஞ்சம் வாங்குகிறதாக மாறியிருக்கும்போது, இது உண்மையாகவே, நீங்களும் நானும் நேர்மையையும் உண்மையையும் நம்பி



தொடர்ந்து கைக்கொள்வோம். நாம் நமது அரசை நம்பி, நாம் அதற்காக பணிசெய்கிறோம், நமது பள்ளிக்கூடங்கள், வியாபாரிகள், ஓட்டல் சொந்தக்காரர்கள், வங்கியில் பணிசெய்கிறவர்கள் இன்னும் இவ்வாறாக பலர் உண்மையாக நடந்துகொள்ளமுடியும்.

ஆனபடியினால், நீங்கள் உங்களை ஒரு பாவியெனவும், நீங்கள் இழந்து போனவர்கள் எனவும், உங்களுக்கு மன்னிப்பு தேவையெனவும், நீங்கள் இரட்சிக்கப்பட வேண்டுமெனவும், நீங்கள் உங்களுக்குள் உண்மையாகவும், தேவனிடத்தில் உண்மையாகவும் இருக்கும்படி உங்களை உற்சாகப்படுத்தி, இந்தப் பாடத்தினை முடிக்கின்றேன். நீங்கள் இவைகளைச் செய்தால் தேவனிடத்தில் விசுவாசம் வைத்து, கிறிஸ்துவே தேவனுடைய குமாரரென்று விசுவாசித்து உங்கள் பாவங்களுக்காக மனந்திரும்பி, கிறிஸ்துவுக்குள்ளான உங்கள் விசுவாசத்தை அறிக்கையிட்டு, உங்கள் பாவங்கள் கழுவப்படும்படி ஞானஸ்நானம் பெற்றுக்கொள்ளுங்கள், அதன்பின் கர்த்தர் உங்களை தமது சபையில் அங்கத்தினராகச் சேர்த்துக்கொள்ளுவார் (மாற்.16:16; அப்.2:38; அப்.2:47). நீங்கள் இப்படிச் செய்வீர்களென நான் உங்களுக்காக ஜெபிக்கிறேன்.

மீண்டும், நீங்கள் உங்களுடைய பாடத்திற்கும் தேவனுக்குக் கீழ்ப்படிதலுக்கும் உதவியாகயிருக்க முடியுமானால், தயவுசெய்து எங்களுக்குத் தெரியப்படுத்துங்கள். அடுத்த முறைவரைக்கும், நான் உங்களுக்கு குட்பை சொல்லுகிறேன்.

## நடப்புச்செய்திகள்

- ❒ மே, ஜூன் மாதங்களில் பொதுமக்களுக்கு குடிநீர் சீராக விநியோகிக்க ரூ200 கோடி ஒதுக்கீடு செய்து முதல் அமைச்சர் உத்தரவு.
- ❒ திண்டுக்கல் மாவட்டத்தில் விபத்து வாய்ப்புள்ள ரோடுகளில் 65 இடங்களில் மீடியன் அமைப்பு.
- ❒ ஜெர்மனியில் சர்வாதிகாரி ஹிட்லர் தப்பிச் சென்றதாக கூறப்படும் நீர்மூழ்கிக்கப்பல் 73 ஆண்டுகளுப்பின் கடலுக்கடியில் கண்டுபிடிப்பு.

## தெரிந்துகொள்வோம் *-K.R.K.Ravi Asir*

- ▶ **தொலைபேசியைக் கண்டுபிடித்த கிரகாம்பெல், தன் சொந்த உபயோகத்திற்காக ஒரு டெலிபோன்கூட வைத்துக்கொள்ளவில்லை.**
- ▶ **அர்ஜென்டினா நாட்டின் அருகேயுள்ள பாக்லாந் தீவில் 2 ஆயிரம் பேர் மட்டுமே வசிக்கின்றார்கள். ஆனால் இந்தத் தீவில் 7 லட்சம் கம்பளி ஆடுகள் உள்ளன.**
- ▶ **நில நடுக்க அதிர்ச்சிகளின் தீவிரம் மற்றும் தோற்றத்தைப் பதிவு செய்ய உதவும் கருவிக்கு 'பூகம்ப அளவி' (சிஸ்மோகிராப்) என்று பெயர்.**
- ▶ **அதிக அளவு உண்ணும்போது இரைப்பை விரியும் ஆனால் உணவே இல்லாதபோது வயிறு சுருங்காது**
- ▶ **நம் காதுகள் மதிய வேளையில் சற்று மந்தமாகவும் விடியற்காலை, இரவு நேரங்களில் மிகக் கூர்மையாகவும் செயல்படுகின்றன.**